பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா:

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 10 சனிக்கிழமை (23.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 125

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றும்

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

## அயர்லாந்து குழு கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தது!

(கிளிநொச்சி)

சமாதானத்தை வெற்றிபெறச் செய்ய இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பொதுக்கட்டமைப்பொன்று மிகவும் அவசியமானது.

இவ்வாறு அயர்லாந்தின் விசேட தூதுவர் கிறிஸ்பிளட் தெரிவித்துள்ளார்.

அயர்லாந்து தூதுக் குழுவினர் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சமாதான செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இச் சந்திப்பின்போதே கிறிஸ்பிளட் பொதுக்கட்டமைப்பின் அவசியத்தை வலியுறுத்தினார். இச் சந்திப்பில் அயர்லாந்து விசேட தூதுவர் கிறிஸ்பிளட்டுடன் அபிவிருத்தி நிபுணர் மேரி சுட்டன அயர்லாந்து புதுடில்லி தூதரக பிரதித் தலைவர் பற்பௌர்ணி, அவசர மீட்பு நடவடிக்கைத் தொழில்நுட்ப ஆலோசகர் ஆன் ஹோம்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை நாம் சென்று பார்வையிட்டோம். அவற்றை மிகவும் கச்சிதமாக

(14 ஆம் பக்கம் பார்க்க)



# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பொதுக்கட்டமைப்பு வேண்டும்!



## அரசிடம் ரணில் பகிரங்க வேண்டுகோள்

(கொழும்பு)

புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து, பொதுக் கட்டமைப்பினை உருவாக்க முன்வரவேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று காலியில் நடைபெற்ற கூட்டத்தில் பகிரங்கமாக அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளத்தில் வான் விபத்து யாழ். இளைஞன் மரணம்

(புத்தளம்)

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த வான் ஒன்று புத்தளம் காக்காப்பள்ளிப் பிரதேசத்தில் விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாக வந்துகொண்டிருந்த வானை சாரதியால் கட்டுப்படுத்தமுடியாமல் போனமையினால் மதில் ஒன்றுடன் வான் மோதியதால் இவ் விபத்து இடம்பெற்றதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்துச் சம்பவத்தின்போது யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த எஸ். இராஜன் (வயது 23) என்பவரே மரணமானதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர். இவர் படுகாயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அங்கு மரணமானதாகத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மின்தாக்கி பெண் மரணம்

### துன்னாலையில் சம்பவம்

(மருதங்கேணி)

நிலத்தில் கிடந்த வயரைத் தூக்கியபோது மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச் ... வராவார்.

வீட்டு வளவை துப்புரவு செய்த பிரஸ்தாபப் பெண் நிலத்தில் கிடந்த வயரைத் தூக்கியபோதே மின்சாரம் தாக்கியதாக தெரிவிக்

## பொதுக்கட்டமைப்புப் பற்றி புலிகளின் அறிவிப்பு அடுத்தவாரம்?

(கிளிநொச்சி)

ஆழிப்பேரலை தொடர்பில் அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்படவிருக்கும் பொதுக் கட்ட ... வில்லை. அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பு தொடர்பில் 99 வீதமான பணிகள் நிறைவடைந்திருப்பதாக ... கருத்து எதனையும் வெளியிடாத அதேநேரம் கட்டுநாயக்கவில் நடைபெற்ற சந்திப்பின்போது சொல்ஹெய்ம் உடன்பாடு காணப்பட்டதாக கூறப்படும் 99 வீத

நிலத்தில் கிடந்த வயரைத் தூக்கியபோது மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச் சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் துன்னாலை வடக்கு வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நாகர்கோவிலிலிருந்து இடம் பெயர்ந்து வல்லிபுரக் குறிச்சியில் வசித்துவந்த ஆறு பிள்ளைகளின் தாயான துரைராஜா தங்கமணி (வயது 45) என்பவரே மரணமான வீட்டு வளவை துப்புரவு செய்த பிரஸ்தாபப் பெண் நிலத்தில் கிடந்த வயரைத் தூக்கியபோதே மின்சாரம் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. மின்சாரம் தாக்கியதையடுத்து அவர் மந்திகை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட சமயம் வழியில் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

அவரது சடலம் மரணவிசாரணையின் பொருட்டு மந்திகை மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-35)

(கிளிநொச்சி)

ஆழிப்பேரலை தொடர்பில் அரசாங்கத்துடன் செய்துகொள்ளப்படவிருக்கும் பொதுக் கட்டமைப்புக் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவிப்பொன்றை வெளியிடுவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

இது பெரும்பாலும் அடுத்த வாரத்தில் நிகழலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. எனினும், இதனை விடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு உறுதிப்படுத்த வில்லை. அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பு தொடர்பில் 99 வீதமான பணிகள் நிறைவடைந்திருப்பதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருந்தார்.

அரசாங்கத் தரப்பு இது குறித்து

அதேநேரம் கட்டுநாயக்கவில் நடைபெற்ற சந்திப்பின்போது சொல்ஹெய்ம் உடன்பாடு காணப்பட்டதாக கூறப்படும் 99 வீத இணக்கங்கள் தொடர்பான ஆவணங்களை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலர் புலித்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா.பொதுச் செயலாளர் பதவியை ஆசிய நாட்டவருக்கு வழங்கவேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவியை ஆசிய நாட்டவர் ஒருவருக்கு பெற்றுக் கொடுக்கவேண்டிய காலம் வந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் தலைநகர் யகார்த்தாவில் நேற்று ஆரம்பமான ஆசிய ஆபிரிக்க நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் ஐ.நா. சபை ஊடாக நிரந்தர தீர்வொன்றை பெற்றுத்தரவேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திடம் உள்ளது.

ஆசியா உட்பட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு மே-2 இல் நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதியை இம் மாதம் 25 ஆம் திகதிவரை நீடித்துள்ளது.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பாலசிங்கம் இதனைத் தெரிவித்தார். முன்னர் இதற்கான இறுதித் தினம் இம் மாதம் 15 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை வடக்குக் கிழக்கு பாடசாலைகளின் தொண்டராசிரியர்களாக கடமையாற்றுபவர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சை மே மாதம் 2 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளதாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பெயர்ப்பட்டியலை திங்கட்கிழமை முதல் வலயக் கல்விப் பணிமனைகளில் பார்வையிடமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-08)



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 2349999 / 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290 / 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com


# தமிழீழதேசிய தலைவர் வழங்கிய ஆலோசனைகளே மீட்பு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த உதவியது

## கடற் புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**தமிழீழ தேசியத் தலைவர் வழங்கிய ஆலோசனைகள் ஆழிப் பேரலையால் பெரும் அழிவுகளை எதிர்கொண்ட முல்லைத்தீவு நகரின் மீட்பு நடவடிக்கைகளுக்குப் பெரும் உறுதுணையாக இருந்தது என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தொிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது தமிழர் தாயகத்தின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்கு வகித்த மீன்பிடித் தொழில ஆழிப்பேரலையினால் பெரும் பின்னடைவுகளைச சந்தித்துள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மககள அரசின் உதவிகளை எதிர்பார்த்து ஏமாந்துவிட்டனர். ஆழிப்பேரலை ஏற்பட்டு 3 மாதங்கள் கடந்த நிலையிலும் அரசின் உதவிகள் பெரிதாக மக்களுக்குக் கிடைக்கவில்லை.

கடந்த காலப்போரின் போது பெரும் அழிவுகளைச் சந்தித்த மக்கள் ஆழிப்பேரலையினால் பெரும் அழிவுகளைச் சந்தித்துப் பொருளாதார ரீதியான பெரும் சுமைகளைத் தாங்கியுள்ளனர்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள்தமது தொழிலைச் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இம் மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவிகள் நிறையவே தேவைப்படுகிறது.

மேலும் முல்லைத்தீவில் ஆழிப் பேரலையின்போது மீட்பு நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் எவ்வாறு விரைவாக செய்து முடித்தார்கள் என்பது சர்வதேச நாடுகள் அனைத்துக்கும் ஆச்சரியமாகவுள்ளது. கடந்த போர்க் காலங்களில் நாம் எதிர்கொண்ட சவால்களே ஆழிப்பேரலையின் தாக்கத்தின் போதும் எம்மை மீட்பு நடவடிக்கைகளை விரைவாக செய்துமுடிக்கக் காரணமாக அமைந்தது.

### சுனாமியின் போது நேரில் கண்டகாட்சிகள்...

சம்பவம் நடைபெற்ற நேரம் நான் கடமை நிமித்தம் முல்லைத்தீவு சென்றிருந்தேன். 8.45 மணி அளவில் வலையன்மடம் மாத்தளன் பக்கமாக கடல் குடியிருப்புப் பகுதிகளுக்குள் ஏறிவிட்டது என்ற தகவல் தொலைத்தொடர்புக் கருவி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது.

உடனடியாகவே நாங்கள் அந்தப பகுதிக்குப்போய விட்டோம். நாங்கள் அங்கு போய சேர இரண்டாவது அலை அடித்துத தண்ணி வந்து விட்டது. வலைகள, படகுகள் எல்லாம் தண்ணீரில அடிபட்டுத்திக்குத் திசைகாகக் கிடந்தன. இந்த நிலையில் அலைக்குள் சிக்குண்டவர்கள் எல்லோரும் ஆங்காங்கே இருந்து ஓடிக் கொண்டிருந்தார்கள். வலையன்மடம் கிறிஸ்தவ ஆலயத்தடியில் மீன்பிடி வலைகள், படகுகள் உட்பட மீன்பிடி உபகரணங்கள் எல்லாம் வந்து கரையொதுங்கியிருந்தன. கிறிஸதவ ஆலயத்தைப் பார்க்க வித்தியாசமான தோற்றத்தைத் தந்தது. நான் கடலிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் நின்றேன். இப்படி இருக்கக் கடல் 3 ஆம் முறையும் பொங்கியெழுந்து வந்தது. இதைப் பார்த்த உடனே நான் ஓட ஆரம்பித்து விட்டேன்.

என்னால் ஓடவே முடியாமலிருந்தது. கஞ்சல்கள், குப்பைகள் எல்லாம் சுற்றி வந்து விட்டது. இதனைத் தவிர்த்துக் கொண்டு 25 மீற்றர் தூரம் வரவில்லை கடல் முழங்கால் மட்டத்துக்கு வந்துவிட்டது.

இப்படியே அந்தப் பகுதியில் இருந்தவர்களைப் பாதுகாப்பாக அனுப்பிக கொண்டிருந்தேன். இந்த நிலையில் எங்களுக்கு மீண்டும தகவல் வருகிறது. முல்லைத்தீவு ஆஸ்பத்திரி வரைக்கும் தண்ணி ஏறி வந்துவிட்டது. கனபேர் செத்து விட்டார்கள். ஒருத்தரையும் மீட்க முடியவில்லை ஏன்ற தகவல் எங்களுக்கு வருகிறது

இப்படி இருக்க நாங்கள் முல்லை நகருக்கு வருவதற்குத் தயாராகி விட்டோம். உடனடியாக வேறு படையணிகள் எல்லாம் உரிய இடத்துக்கு வந்து சேர்ந்திருந்தனர்.

அடுத்த நாள் காலை மீட்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி மேற்கொள்வதற்காக முல்லைத்தீவு நோக்கி வந்து கொண்டிருந்தேன். வட்டுவாகல் பாலத்தால் சின்னத்தங்காடு நோக்கி வந்தேன். கடல் கிட்டவாகத் தெரிந்தது. வீதி எங்கும் கஞ்சல்களால் நிறைந்திருந்தது. வீடுகள எல்லாம் இடிந்துபோய் இருந்தன. இப்படியே சின்னத்தங் காட்டுப் பாலத்தை சென்றடைந்த போது பாலம் பெரும் கிடங்காக இருந்தது.

செந்தளிர் கட்டடம் இருந்த இடம் தெரியாமல் இருந்தது. அதையும் தாண்டி வந்தபோது முல்லைத்தீவு பாடசாலை சிதைந்து போய் தளபாடங்கள் எல்லாம் வீதி வீதியாகக் கிடந்தன. இப்படியே முல்லைத்தீவைச் சென்றடைந்து மீட்பு நடவடிக்கையை ஆரம்பித்தோம்.

முல்லைத்தீவைப் பார்க்கின்ற போது கற்குவியலாக இருந்தது. இத்தனை நாட்களாக நாங்கள் ஓடித்திரிந்த முல்லைத்தீவின் தோற்றம் ஒரு சில நிமிடங்களில் தகர்ந்து போய ஒரு சூனியமாகக் காட்சி தந்தது. கடற்கரையில் இருந்த றோட்டைக்காணவில்லை. வாடிகளைக் காணவில்லை, கிறிஸ்தவ ஆலயத்தைககாணவில்லை. கடற்கரையில் நான் கடி உயரத்தில் இருந்த கிணறு மணல அரிக்கப்பட்டு பத்தடிக்கு அதிகமான உயரத்தில் இருந்தது. கடல் 50 மீற்றர் தூரத்துக்கு மேல் உள்ளே வந்திருந்தது.

### மீட்புப் பணிகள்

இப்படியே நாங்கள் எங்கள் பணியை ஆரம்பிக்கின்றோம். அனைத்துப் பிரிவுகளுக்கும் ஒவ்வொரு பகுதி பகுதிகளாக பிரித்துக் கொடுத்திருந்தோம். மீட்பு அணிகளை அனுப்பிய சில நிமிடங்களில் அனைத்து அணிகளும் பதினைந்து சடலங்கள் எடுத்திருந்தன.

கட்டட இடிபாடுகளுக்குள் சடலங்கள இருக்கிறது என்றெல்லாம் தகவல அனுப்பிக் கொணடிருந்தார்கள். உடனடியாக கைவசம் இருந்த உழவு இயந்திரங்களை அனுப்பினோம். அனுப்பிய சொற்ப நேரத்தில் அனைத்து உழவு இயந்திரங்களும் சடலங்களை நிறைத்தபடி வந்து நின்றன. நாங்கள் இப்படி எதிர் பார்க்கவேயில்லை.

இப்படியாக முதல் இரண்டு நாட்களும் எடுத்த சடலங்கள் அடையாளங் காணக்கூடியதாக இருந்தது. இரண்டாவது நாள் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கும் நகருக்கும் இடையில் இருந்த இடம் கடல் நீரால் நிறைந்திருந்தது. அதனுள் மீட்பு நடவடிக்கைக்காக மகளிர் படைப் பிரிவை ஈடுபடுத்தியிருந்தோம். அவர்கள் இடுப்பளவு தண்ணீருக்குள் மெதுமெதுவாக நகர்ந்து பெருமளவான சடலங்களை எடுத்திருந்தார்கள். அதற்குள் அவ்வளவு சடலங்கள் இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை.

எங்களால் மீட்கப்பட்ட பெருமளவான சடலங்கள் முட்கம்பிகளாலும், கருக்கு மட்டைகளாலும் கிழிக்கப்பட்டு பெருங்காயங்களுடனும் ஆடைகள் இல்லாமலும் தான் இருந்தன.

ஒவ்வொரு சடலத்தையும் எடுக்கின்ற போது எங்களுக்கு நெருப்பில் எரிவது போல இருந்தது. அந்தளவு வேதனையாக இருந்தது. நீண்டகாலமாக எங்களுடன் உறவாடி உணவு உண்டு எங்களின் வயிற்றுப் பசியையும் களைப்பையும் நீக்கிய உறவுகளை உயிரற்ற உடல்களாகக் காண்பது எவ்வளவு வேதனையானது.

### சடலங்களை மீட்கும் போது...

முல்லைத்தீவில் பனை வடலிகள் காடு போல பல இடங்களில் சடைத்து வளர்நதிருக்கின்றன. அதனுள் எவராலும் செல்ல முடியாத அளவுககு அவை சடைத்திருக்கின்றன. அந்த வடலிக்குள் சடலங்கள் கிடந்தன. அவற்றை எப்படி எடுப்பது. பெரும் சிரமப்பட்டு ஒவ்வொரு பனையாக புல்டோசர்கள் மூலம் பிடுங்கி எடுத்து சடலங்களை எடுத்தோம்.

ஒரு கட்டத்தில் பனை வடலிகளுக்கு நடுவில் ஒரு தாயின் சடலம் இருநதது. அதை எடுத்த பிறகு பார்ததால் அதற்கு கீழ் இரண்டு சிறுபிளளைகளின் சடலங்கள் இருந்தன. அந்தத் தாயின்பிள்ளைகளாக இருக்க வேணடும். தாயுடன் அடிபட்டு வந்து அப்படியே இறந்து போய்விட்டார்கள்.

இப்படி ஒவ்வொரு கட்டடங்களுக்குளளும் மரங்களின் கீழும் பற்றைகளுக்குள்ளுமாக எல்லா இடமுமமக்களை உயிரற்ற உடல்களாக எடுத்தோம. வெளிப்பகுதிக்குள மீட்பு நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்த அதேசமயம் இறால் குளத்திலும், மீட்புப் பணி ஆரம்பமாகி இருந்தது.

இறால் குளத்தில் நாங்கள் வலை வீசி இறால் பிடித்து சாப்பிட்ட அந்தக் குளத்தில் எங்கள் மக்களை குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் ஆண்கள் என எல்லோரையும் குவியல் குவியலாக எடுத்துக் கொண்டிருந்தோம்.

இறால் பிடிக்கின்றபோது பிடிக்கப்பிடிக்கக்குறையாமல் இறால் வந்தது போல எங்கள் மக்களின் உடல்களை எடுக்க எடுக்க குறையாமல் வந்துகொண்டே இருந்தன. அந்தளவுக்கு இறால் குளத்தில் சடலங்கள் குவிந்திருந்தன. கடலில் வலை வீசி மீன் பிடித்த மக்களை இறால் குளத்தில் பிடிக்க வேண்டியதாக இருந்தது. நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தது. சடலங்கள் ஊதிப் பெருத்து அழுகிய நிலையில் இருந்தது. எப்படி அகற்றுவது, எங்கு பிடித்துத் தூக்குவது அந்தளவுக்கு சடலங்கள் பிய்ந்து விழுந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் அவற்றை அகற்ற முடியாத நிலை உருவானது. எங்கள் மக்களை இப்படிக் காண்போம் என்று நாங்கள் ஒரு போதும் நினைக்கவே இல்லை என்று அந்தப் பயங்கரமான மீட்பு அனுபவத்தை நிறுத்தாமல் கூறிக்கொண்டே போனார் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை. (க)

## இராசி பலன்

**23.04.2005**

**(சித்திரை10 , சனிக்கிழமை)**

**சதுர்த்தசி பிற்பகல் 04-31 மணிவரை**

**அத்தம் முற்பகல் 08.50 மணிவரை**

**இராகுகாலம் 09.00 - 10.30 மணிவரை**

**சுபநேரம் 03.00- 04.30 மணிவரை**

**சித்திரைச் சித்திரை.**

| | |
|---|---|
| மேடம் | மனமகிழ்ச்சி, உடல் நலம், காரியஅனுகூலம், நண்பர்கள் சந்திப்பு. |
| இடபம் | வியாபார நன்மை, வேலைச்சுமை, உணர்ச்சி வசப்படுதல், முயற்சி தாமதம். |
| மிதுனம் | உடல் நலக்குறைவு, திடீர் நன்மை, காரிய தாமதம், மனச்சோர்வு. |
| கடகம் | கூட்டு முயற்சி, புதிய தகவல், போசன சுகம், பிரயாண நன்மை. |
| சிங்கம் | விவாதம், மாதர் நட்பு, கோபப்படுதல், காரிய தாமதம். |
| கன்னி | சயன சுகம், போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| துலாம் | பிரயாணம், நண்பர்கள் விரோதம், தன விரயம், சுரவியாதி. |
| விருச்சிகம் | மனமகிழ்ச்சி, பெருமையடைதல், தொழில் நன்மை, விருந்துபசாரம். |
| தனுசு | அதிகாரம், தொழில் நன்மை, நல்ல சம்பவம், முயற்சி பலிதம். |
| மகரம் | இடமாற்றம், சரீரப்பிரயாசை, பித்தரோகம், காரிய தாமதம். |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, தன விரயம், காரிய தாமதம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | கௌரவமான நிலை, சௌக்கிய விருத்தி, காரிய அனுகூலம், தெய்வ சிந்தை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

## பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு பிரத்தியேக பிரிவு

ஆயுள்வேத மருத்துவ சேவையில், பொதுமக்கள் தெரிவிக்கும் முறைப்பாடுகளை விசாரிக்க பிரத்தியேக பிரிவு ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இத்துறைசார்ந்த போலி மருத்துவர்களை சுற்றிவளைப்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.

இவ்வாறு இனம் காணப்படும் போலி மருத்துவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என மருத்துவ சபையின் பதிவாளரான டாக்டர் எல்.பெரேரா தெரிவித்தார்.

மருத்துவ சேவையில் தம்மைப் பதிவு செய்து கொள்ளாமல் சிகிச்சைகளில் ஈடுபடுவது, சான்றிதழ்களை விநியோகிப்பது, நோயாளர்களிடமிருந்து பணம் அறவிடுவது போன்ற நடைமுறைகள் பரீசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆயுள்வேத மருத்துவத் துறையை மேம்படுத்துவது தொடர்பாக நோயாளிகளுக்கு சிறந்த சேவையாற்றுவதும் இந்த முயற்சியின் நோக்கமென டாக்டர் பெரேரா மேலும் தெரிவித்தார். - (க-9)

### சுனாமி அச்சம்காரணமாக

## சுற்றுலாப் பயணிகளின் வருகை இருபது சதவீதத்தால் வீழ்ச்சி

(கொழும்பு)

இவ்வருடத்தில் முதல் இரு மாதஙகளுக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவவருடத்தின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 74 ஆயிரத்து 800 சுற்றுலாப் பயணிகளே இலங்கை வந்துள்ளனர்.

ஆனால் கடந்த வருடம் ஜனவரி மறறும் பெப்ரவரி மாதங்களில் 93 ஆயிரதது 500 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். அந்த வகையில் இவ்வருட ஆரம்பம சுற்றுலாத் துறையில் வீழ்ச்சியைக் காட்டுகிறது.

இது வெளிநாட்டு வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுததும் என அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-5)

## விவாத அரங்கு - 8

நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால்

எமது கலாசாரம்:

✧ சீரழிந்துள்ளது.

✧ சீர்பெற்றுள்ளது.

நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி

திரு.சி.சிவநேசன்

உங்கள் வாதங்களை எழுதி

அனுப்பி வையுங்கள்.


அனுப்பவேண்டிய முகவரி :

விவாத அரங்கு, வலம்புரி,

இல.15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

# போப் 16 ஆம் பெனடிக்ட் தேர்வானது எப்படி?



1. வயதில் மூத்த கர்தினால் முதலில் வாக்களித்தார்.

2. வாக்களிக்கும் கர்தினால்கள் தரையில் மண்டியிட்டு சிறிது நேரம் பிரார்த்தனை செய்து லத்தீனில் கூறியவை: எனக்கு கிறிஸ்துவே சாட்சி, அவர் தான் நீதிபதி, கடவுளின் முன் நிற்பவருக்கு வாக்களித்துள்ளேன். அவரே தேர்வு செய்யப்படுவார் என நினைக்கிறேன்.

3. மேஜை மீதுள்ள கிண்ணத்தில் வாக்களிக்கப்பட்டது.

4. எல்லோரும் வாக்களித்த பின்னர் வாக்குகள் எண்ணப்பட்டன.

5. வாக்களிக்கும் போது பணியில் ஈடுபட்ட கர்தினால்கள்.

6. இறுதியாக வாக்களிப்பை சரி பார்த்த கர்தினால்.

7. ரட்சிங்கருக்கு போப்புக்குரிய உடைகள் அணிவிக்கப்பட்ட இடம், போப் தேர்தல் முடிந்த 15 நிமிடங்களில் உறுதி செய்ய வத்திக்கான் மணி அடித்து அடுத்த 30 நிமிடங்களில் பல்கனியில் போப் 16ஆம் பெனடிக்ட் அறிமுகம் செய்யப்பட்டார். அப்போது இந்திய நேரம் இரவு 10.15 மணி.

## போப் தேர்தல் நடந்த நாட்கள்

| தேர்தல் நாள் | கார்டினல் | ஓட்டெடுப்பு | தேர்வான போப் |
|---|---|---|---|
| 1903 ஜூலை 31-ஆக.4 5-நாட்கள் | 62 | 7 | பத்தாம் பயஸ் |
| 1914 ஆக. 31 - செப்.3 4-நாட்கள் | 56 | 10 | 15ம் பெனடிக்ட் |
| 1922 பிப். 2-6 5-நாட்கள் | 53 | 14 | 11ம்பயஸ் |
| 1939 மார்ச் 1-2 2-நாட்கள் | 62 | 3 | 12ம்பயஸ் |
| 1958 ஆக. 25-28 4-நாட்கள் | 51 | 11 | 23ம் ஜான் |
| 1963 ஜூன் 19-21 3-நாட்கள் | 80 | 6 | ஆறாம் பால் |
| 1978 ஆக. 25-26 2-நாட்கள் | 111 | 4 | முதலாம் ஜான்பால் |
| 1978 அக். 14-16 3-நாட்கள் | 111 | 8 | இரண்டாம் ஜான்பால் |
| 2005 ஏப். 18-19 2 நாட்கள் | 115 | 4 | 16ம் பெனடிக்ட் |

## எதிர்கொள்ளும் பிரச்சினைகள்



போப் 16ஆம் பெனடிக்ட் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் முக்கியமானது நிதிப் பிரச்சினைதான். கடந்த மூன்றாண்டுகளாக வத்திக்கானில் பற்றாக்குறை பட்ஜட். அதறகுக் காரணம் சமீப காலங்களில் அளிக்கப்பட்ட நன்கொடை அளவு குறைந்ததுதான்.

ஐரோப்பா மற்றும் வடஅமெரிக்காவில் கத்தோலிக்க மதப் பணிகளை ஏற்க முன்வருவோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. அதை அதிகரிக்க இவர் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும் (மணம் முடிந்தவர்கள் பாதிரியாராக அனுமதித்தல்).

குடும்பக்கட்டுப்பாட்டு விஷயங்களில் (கருச்சிதைவு) பெரும்பாலான கத்தோலிக்கர்கள் திருச்சபை முடிவுகளை விட சொந்த முடிவுகளை எடுக்கின்றனர்.

## புதிய போப்பின் சுயவிபரம்

*பிறப்பு:* 1927 ஏப்ரல் 16 ஜேர்மனியில் மார்டிலாம் இன்.

*வகித்த பதவிகள்:* 1981-2005 வரை கத்தோலிக்க பேரவைத் தலைவர், 2002-2005 வரை கர்தினால் குழுத் தலைவர்.

*திருநிலைப்படுத்தப்பட்டது:* 1951 ஜூன் 29

*ஆர்ச் பிஷப்:* 1977 மே 28

*கர்தினால்:* 1977 ஜூன் 27

*கல்வி:* 1953 மூனிச் பல்கலை. இறையியலில் டாக்டர் பட்டம்.

*போப் தேர்வு:* 2005 ஏப்ரல் 19

* 100ஆண்டுகளில் தேர்வு செய்யப்பட்ட அதிக வயதான (78) போப் இவர்தான்.
* இரண்டாம் உலகப் போரின் போது நாட்டின் சட்டப்படி கிட்லரின் நாஜி இளைஞர் படையில் பணியாற்றியிருக்கிறார். என்றாலும் அவர் நாஜிக் கட்சியில் சேர்ந்ததில்லை.
* ஜேர்மனியிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 8ஆவது போப்.



## போப்பின் பதவிகள்

புதிய போப் 16ஆம் பெனடிக்ட் கத்தோலிக்கர்களின் மதகுரு மட்டுமல்ல. அவர் பல்வேறு பட்டங்களுக்கு சொந்தக்காரர். அவை

1. ரோம் நகரப் பிஷப்
2. யேசுவின் பிரதிநிதி
3. செயின்ட் பீற்றரின் வழித்தோன்றல்
4. திருத்தூதரின் இளவரசர்
5. இத்தாலியின் மதகுரு
6. மேற்கத்தியவர்களின் குடும்பத்தலைவர்
7. ரோம் மாகாண ஆர்ட்பிஷப்
8. வத்திக்கான் நாட்டின் தலைவர்
9. கடவுளின் சேவகர்களுக்கெல்லாம் சேவகர்

## பணிகள்

* பிஷப் மற்றும் கர்தினால்களை நியமித்தல்.
* மாவட்ட அருளாட்சி பரப்புகளை உருவாக்குதல்.
* மதவிஷயங்களில் ஈடுபாடு.
* அருளாளர் புனிதர் உள்ளிட்ட பட்டங்கள் வழங்குதல்.
* பிஷப் மற்றும் வத்திக்கானிடையே பிரச்சினை ஏற்பட்டால் தீர்த்து வைத்தல்.



தற்போது பதவியேற்றுள்ள போப்பை மிகவும் கவர்ந்த 15ஆம் பெனடிக்ட்

## இரகசிய அறையில் நடந்தது என்ன?

வத்திகானில இரகசிய அறைக்குள் (சிஸ்டின் தேவாலயம்) நடக்கும் விஷயங்களை வெளியில் யாருக்கும் சொல்வதில்லை என்றபோதிலும் அங்கே என்ன நடந்தது? ஜெர்மனியைச் சேர்ந்த ஜோசப ரட்சிங்கர் ஏன் போப்பாக தேர்வு செய்யப்பட்டார்? என்ற கேளவி உலகம் முழுவதும் எழுந்துள்ளது.

'போப் ஆவோம் என்று நினைத்து சிஸ்டின் தேவாலயம் செல்பவர்களெல்லாம் கர்தினால்களாகவே திரும்புவார்கள்' என்பது வத்திகான் மொழி. கறுப்பு கர்தினாலுக்கு வெண் புகை வருமா என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே விஞ்சிவிட்டது. ஆபிரிக்காவில் பிறந்த கர்தினால் அரின்சே, சிஸ்டின் தேவாலயத்திலிருந்து கர்தினாலாகவே திரும்பிவிட்டார். அதேசமயம் ரட்சிங்கர் அடுத்த போப் ஆவார் என்ற எதிர்பார்ப்புகள் ஓரளவு உலகம் முழுவதும் இருந்தது என்பதை மறுக்க முடியாது. எதிர்பார்ப்புக்கேற்ப அவர் தேர்வு செய்யப்பட்டது வத்திகான் வரலாற்றில் முதன் முறையென்றே சொல்ல வேண்டும்.

## ரட்சிங்கர் போப்பான இரகசியம்

ஜேர்மன் கர்தினால் ரட்சிங்கர் போப்பாக தேர்வு செய்யப்பட்டதற்கு உள்ள பல காரணங்களில் கீழ் கண்டவைகளும் பொருந்தும். இரண்டாம் ஜான் பால் போப்பாக இருந்தபோதே செல்வாக்குடன் திகழ்ந்தவர் ரட்சிங்கர். ஜான் பால் மிகவும் மதித்த கர்தினால் இவர்.

* இனிய சுபாவம், தலைமையேற்கும் பண்பு, புனித பொறுப்பேற்கும் திறன் ஆகியவற்றை கர்தினால் குழுவின் தலைவராக இருந்தபோது மற்றவர்களுக்கு உணர்த்தியிருக்கிறார்.
* பழமையான கத்தோலிக்க மரபுகளைப் பாதுகாக்கும் வீரராக ரட்சிங்கர் இருப்பார் என்ற எண்ணம்.
* 78வயது என்பதால் நீண்ட காலத்துக்கொருவரே போப் பதவி வகிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

## 16ஆம் பெனடிக்ட் பெயர் காரணம் என்ன?

முதலாம் உலகப் போரின் போது பாதிக்கப்பட்ட நாடுகளில் சர்சுகளை வழிநடத்திய போப்பின் (15ஆம் பெனடிக்ட்) பெயரைத் தேர்வு செய்து அவருக்கு பெருமை சேர்த்துள்ளார் புதிய போப் 16ஆம் பெனடிக்ட்.

இதுவரை பதவி வகித்த போப்களில் பெரும்பாலானோர் தங்கள் [illegible] (ஜான்) என்ற பெயர் இருக்குமாறு பார்த்து பெயரை அமைத்துக்கொள்வார்கள். இதற்கு முன் பெனடிக்ட் என்ற பெயரை 15 போப்கள் தேர்வு செய்தனர்.

அவர்களில் கடைசியாகப் பட்டம் ஏற்றவர் போப் 15ஆம் பெனடிக்ட் ரட்சிங்கர் பிறப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் போப் 15ஆம் பெனடிக்ட் (1922) மறைந்துவிட்டார்.

முதல் உலகப் போரின் போது பாதிக்கப்பட்ட நாடுகளில் சர்ச்சுகளை நன்கு வழி நடத்தினார். போரின்போது நடுநிலை தவறாமல் கண்டிப்புடன் நடந்துகொண்டார். ஏழு அம்சத திட்டத்தை ஏற்படுத்தி பாதிக்கப்பட்டோருக்கு உதவினார். அவருடைய பல முயற்சிகள் தோல்வியடைந்தன. எனினும் 1918இல் அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனின் 14 அம்ச திட்டத்தில் கருத்துக்கள் இடம்பெற்றன.

போரின் போது உலக ஒற்றுமைக்கு பாடுபட்டவரும் அகதிகளுக்கு உதவ முயற்சி மேற்கொண்டவருமான மறைந்த பெனடிக்ட்டின் கல்லறைக்கு சென்று வழிபடப் 16ஆம் பெனடிக்ட் விருப்பப்பட்டார் என ஆர்பிஷப் ஒருவர் தெரிவிக்கிறார்.

பெனடிக்ட் என்னும் பெயர் - இஸ்லாம் மற்றும் புத்த மதத்துடன் இணக்கமாக செல்வதற்கான அறிகுறி. எனினும் கண்டிப்புடன் நடக்கும் சர்வாதிகாரிக்கு உரியதுமதுதான் என்கிறார் ஸ்பெயினைச் சேர்ந்த இறையியல் அறிஞர் என்றிக் மிரேட் மாக்டெலேனா.

பெடினக்ட் பெயர் செயின்ட் பெனடிக்ட்டை குறிக்கிறது. முன்பு திருச்சபை வழிமுறைகளைக் கட்டியெழுப்பியவர்களில் இவர் முக்கியமானவர்.

# கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்!

## அன்னைபூபதி நினைவு விழாவில் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(முல்லைத்தீவு)

"இன்று நாங்கள் சமபலத்துடன் இருப்பதால் எம்முடன் யுதத்ம் செய்து வெல்லமுடியாது என்ற காரணத்தினால் சமாதான காலதத்தில் எமது போராளிகளும் பொறுப்பாளர்களும் நயவஞ்சகமான முறையில் கொலைசெய்யப்பட்டு வருகிறார்கள். மக்களின் இயல்புவாழ்க்கை ஏற்படவேண்டும். அவர்கள் தங்கள் சொநத மண்ணில் சொந்த வீட்டில் குடியேற வேண்டும். இதனாலேதான் சமாதானத்தை வேண்டிநிற்கின்றோம்"

தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நிறைவு விழா பாண்டியன் குளம் மகாவித்தியாலயத்தில் பாண்டிய குளப் பிரதேச போர் எழுச்சிக் குழு செயலாளர் சிசண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற போது அவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கு முன்னதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ம.ஜெகுவினால் பொதுச் சுடரும அதனைத் தொடர்ந்து மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் நவநீதனால் ஈகைச்சுடரும் ஏற்றி வைக்கப்பட்டன. புனிதன், சிவா மாஸ்ரர், வசந்தினி, அமலன் ஆகியோரால் அன்னைபூபதியின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இவ்விழாவில் தொடர்ந்து பேசிய முகுந்தன், எமது தேச விடுதலையை இலட்சியமாகக் கொண்ட அன்னை பூபதி தான் உண்ணாவிரதமிருந்து விடுதலைப் பசிக்காக தன் உயிரையே ஆகுதியாக்கியுள்ளார். இந்திய அமைதிப்படையின் துன்புறுத்தல்களுக்கும், அநாகரிகமான செயல்களுக்கும் அடாவடித்தனங்களின் மததியில் தன் உயிரை ஏன் போக்க வேண்டும்? என இவர் நினைத்திருநதால் தான் பெற்றெடுத்த பிள்ளைகளுடன் சுகபோகமான வாழ்கையை நடத்தியிருக்கலாம்.

அன்னையின் உயிர் பிரிந்தும் உயிர் அற்ற உடலை எடுப்பதற்கும இந்திய அமைதிப்படை எத்தனை எத்தனை இடையூறுகளை விளைவித்தது என்பதை வரலாறு மறந்து விடமாட்டாது.

நாம் வெற்றி பெறத் தேவையானது சர்வதேச ஆதரவே. அதனாலேதான் நாம் மூன்றாம் தரப்பாக சர்வதேச ஆதரவைப் நாடி நிற்கின்றோம். அன்று எம்மை பயங்கரவாதிகள் என்றும், பிரிவினைவாதிகள் என்றும் பட்டம்சூட்டிய சர்வதேச நாடுகள் இன்று எமது நிலைமையைப் புரிந்து எமது போராட்டம் நயாயமானது என்பதை உணர்ந்துள்ளார்கள். அதனாலேதான் எமது போராட்டத்திற்கு ஆதரவு தர சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன.

இன்று எமது போராட்டம் வலுப்பெற்று விட்டது. போராட்ட காலத்தில் மக்கள் ஆயிரமாயிரமாக மடிந்த போது மௌனமாக இருந்த ஐ.நா. சபை இன்று வழிப்படைந்து விட்டது. கௌசல்யன் கொலை செய்யப்பட்டதற்கு கோபி அனான் மூலமாக வருத்தம் தெரிவிக்கப்பட்டது எமது போராட்டத்திற்குக் கிடைத்த பாரிய வெற்றியாகும்.

'சுனாமி' அனர்த்தத்தின் பாதிப்புகளைப் பார்வையிடுவதற்காக இலங்கை வந்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானை வடக்கே செல்லவிடாது தடுத்து அனுப்பியது அரசாங்கம். பாதுகாப்பென்ற போலிக் காரணத்தை முன்வைத்தது.

இன்று எம்மிடம் 'நீர்மூழ்கிக் கப்பல்' இருப்பதாக அரசாங்கம் நடுக்கம் கொண்டுள்ளது. எமது போராட்டம் தொடங்கிய காலம் முதல் இன்று வரை நர்ம் ஆயுத பலத்தால் வலிமை பெறறவராக உருவாக்கப் பெற்றோம. எமது போராட்டம் வலுப்பெற்றுச் கொண்டிருக்கின்றது.

எம்மிடமுள்ள தரைப்படை, கடற்படை, விமானப்படைகளை விட மனோதிடமும், மன வலிமையும் கொண்ட கரும்புலிப்படையும் எம் வெற்றிக்கு உறுதுணையாக எம் தேசிய தலைவரால் உருவாக்கப்பட்டு அரச படைகளுக்குச் சமனாக இருக்கின்றது.

இப்பிரதேசமும் போராட்ட காலததில் பெரும் நெருக்கடியை சந்தித்த ஒரு பிரதேசமாகும. இங்குள்ள மக்கள் இராணுவ நடவடிக்கை மூலம் இடம்பெயர்ந்தார்கள். இத்தகைய நெருக்கடிகளினாலேதான் மக்கள் ஆயுதம் ஏந்தப் புறப்பட்டார்கள்.

சமாதான காலம் எமக்கொரு இருண்ட காலமாகவே இருக்கப் போகின்றது.

"எம்மைத் தாக்கியவனை நாம் தாக்காமல் விடுவதில்லை". ஆனால் சமாதானம் என்ற கயிற்றால் எமது கைகள் கட்டப்பட்டுள்ளன.

கூட்ட முடிவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(து-128)


### சிறு விளம்பரம்
### ஜோதிடம்

மணமக்கள் பொருத்தம், தோஷநிவர்த்தி, வியாபார முன்னேற்ற தடைகள் இன்னும் பலவற்றிற்கும் நாடவேண்டியது நல்லூர் ஸ்ரீ ராகவேந்திர ஜோதிடம்.


## தேர்த்திருவிழா

(கற்கோவளம்)

பருத்தித்துறை கோட்டுவாசல் ஸ்ரீசண்டிகா பரமேஸ்வரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது. நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும். (7-104)

## மகோற்சவம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்பாள் ஆலய மகோற்சவ பெருவிழா கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து இன்று இரவு சப்பறத் திருவிழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் திங்கட்கிழமை தாத்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

(க-55,91)

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்குக!

## சொல்ஹெய்மிடம் ரணில் வலியுறுத்து

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுககும், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்குமிடையில் நேறறு முன்தினம் மாலை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது இருவரும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

பொதுக்கட்டமைப்பின் 99 சதவீதமான பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், விரைவில் அது உருவாக்கப்படும் என சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

அதற்கு தனது பூரண ஆதரவினைத் தருவதாகத் தெரிவித்த ரணில்,

ஜே.வி.பியின் எதிர்ப்பை விடுத்து பொதுக்கட்டமைப்பை உருவாக்க அரசாங்கத்தை வலியுறுத்துமாறும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எரிக சொல்ஹெய்மை கேட்டுக்கொண்டுள்ளார். (ற-4)

# அமெரிக்கா இலங்கைக்கு கப்பலை வழங்கியது

(கொழும்பு)

அமெரிக்காவினால் இலங்கை அரசாங்கத்திற்கு கப்பலொன்று வழங்கப்பட்டுள்ளது.

'கரேஜ்' என்று பெயரிடப்பட்டுள்ள அமெரிக்காவின் இந்தக் கப்பல், நேற்றுக்காலை கொழும்பு துறைமுகத்தில் வைத்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராலய அதிகாரிகள் இக் கப்பலுக்கான பத்திரத்தை உத்தியோகபூர்வமாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் வழங்கினர்.

'கரேஜ்' என்ற இந்தக் கப்பல் 'சமூத்திர' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு கடற்படையிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, கடற்படையின் பலம் பொருத்திய கப்பலாக செயறபடவுள்ளதால், தமிழீழ விடுதலைப் புகளின் கடற்புலிகளின் பலத்தை கடற்படையினர் குறைத்துவிடுவர் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதற்குப் பின்னணியாக அமெரிக்கா செயறபடவுள்ளதாக அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். (ற-4)

## வருடாந்த மஹோற்சவம்

துன்னாலை கிழக்கு சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தேர் உற்சவமும், நாளை ஞாயிற்றுக்கிழமை 12மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(க-101)


### விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவா மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

### நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.
T.P: 222 3226


# அரசாங்க ஊழியர்களுக்கு ரூ.10 இலட்சம் வரை சொத்துக்கடன்

(நேற்றைய தொடர்ச்சி....)

**11.9 கடன் விண்ணப்பங்களுடன் தொடர்பான முன்னேற்பாட்டுக் கட்டணம்**

அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கி மூலம் கடன் பெறுகையில் சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்களான மதீப்பீட்டு அறிக்கை, சட்டத்தரணிக் கட்டணம், பிரயாணச் செலவுகள் அடங்கலான ஆகக் குறைந்த தொகை ரூபா.7500/= அல்லது ஆகக்கூடியது கடன் தொகையில் 1% ஆதல வேண்டும்.

11.9:1: கடன் விண்ணப்பங்களை வங்கியில் சமர்ப்பிக்கும் போது மேற்போந்த 11:9 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தொகையை உரிய வங்கியில் வைப்பில் இடவேண்டும்.

11.10.1:1 பிரிவின் கீழ் ஆககக்கூடிய தொகையை வங்கியிடம் பரிந்துரைக்கவேண்டும்.

11.10:2 எவரேனும் அலுவலர் ஒருவர் கடன் பெற்றுக்கொண்ட சேவை நிலையத்தில் இருந்து இடமாற்றம் பெற்றிருந்தால் அது பற்றிய உரிய அமைச்சு/திணைக்களம் கடன் பெறப்பட்ட வங்கிக்கு அறிவிக்கவேண்டியதுடன், 25ஆம் பின்னிணைப்பிற்கு அமைவாக இடமாற்றம் பெற்ற இடத்திற்கு உரிய தகவல்களை வழங்க வேண்டும். இடமாற்றங்கள் காரணமாக தவணைக் கட்டணக் கழிப்புகள் நிறுத்தப்படாதிருப்பதிலும் வங்கிகளுக்கு அனுப்பீடு செய்வதில் தாமதங்கள் ஏற்படாதிருப்பதிலும் நிறுவனத் தலைவர்கள் பொறுப்பாக இருக்க வேண்டும்.

பப்படி ஒரு வாரத்திற்குள் உரிய வங்கிக்கு அனுப்புவதற்கு. உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

11.11:3 கடன் விண்ணப்பதாரர் உரிய கடன் தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த வங்கியின் ஒழுங்குகள், விதிகளுக்கு உடன்பட்டு சுற்றறிக்கை மதியுரைகளுக்கு அமைவாக வேண்டிய தகவல்களை மூன்றுமாத காலம் பூர்த்தியாக முன் வங்கிக்கு சமர்ப்பித்து கடன் தொகை அங்கீகரிக்கப்பட்ட பின் வங்கி அதுபற்றி அமைச்சுக்கு/திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும்.

11.11:4 வங்கி கடன் தொகையை வழங்கிய பின் அதனை 27ஆம் பின்னிணைப்பின் படி பொதுத் திறைசேரிக்கும் உரிய அமைச்சுக்கு/ திணைக

## அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை

11.9:2: காணிப் பதிவு அலுவலகத்தில் இருந்து இரு மடித்தாள்களைப் பெற்றுக்கொள்ளல், உரித்தறிக்கைகளை பெற்றுக்கொள்ளல், நில அளவை, நிலப்படக் கட்டணம, அற்றோனித் தத்துவப் பதிவுக் கட்டணம், மற்றும் உரித்து உறுதிகளின் பிழைகள் இருந்தால் அவற்றை காப்புறுதி செய்தற்காக ஆகும செலவுகளை (மேற்போந்த 11.9:1 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலதிக) அலுவலர் தனிப்பட்ட முறையில் செய்யவேண்டும்.

**11.10 சொத்துக்கடன் வழங்கும் பொது நிபந்தனைகள்**

11.10:1: அரசினால் ஈடுசெய்யப்படுகின்ற வட்டியின் பேரில் அலுவலருக்கு வழங்கவேண்டிய கடன் தொகையைப் பரிந்துரைக்கும போது அமைச்சு/திணைக்களம் பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ள வேண்டும்.

கடன் தொகையை பரிந்துரைக்கும்போது கவனயீனம் காரணமாக ஏற்படும் பிரச்சினைகளின் போதும அரசுக்கு நேரும் நட்டங்களின் போதும் கடனை பரிந்துரைத்த அலுவலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நட்டம் அலுவலரிடமிருந்து அறவிடப்படும்.

11.10:1:1 அலுவலரின் சம்பளத்தில இருந்து குறித்து கடன் தொகையை கழிக்கமுடியுமான ஆகக்கூடிய வரையறை 40% வீத வரையறையிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

11.10:1:2 அலுவலரின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்ட பொறுப்புகளுடைய கழிப்புகளையும் வேறு கழிப்புகளையும் கவனததிறகொண்டு

11.10:3 கடன் வழங்குவதற்காக வங்கிக்கு பரிந்துரை செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் குறித்த கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள முன் பணித்தடை செய்வதற்கு ஆளானால் அல்லது பதவி நீக்கம் செய்யப்பட்டால் அல்லது கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டால் கடன தொகையை பெறமுன் அத்தகைய நிலைமைகளைப் பற்றி தாமதிக்காது வங்கிக்கு அறிக்கையிடுவது நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும்.

11.10:4 கடன் பெற தகைமையுடைய அலுவலர் ஒருவர் பற்றி ஒரு திணைக்களம் அல்லது அமைசசு வங்கிக்கு பரிந்துரைப்பது தாமதப்படுமாயின் அல்லது வங்கியிலிருந்து கடன் பெறும் போது அனாவசியமான தாமதங்கள் ஏற்படுமாயின் அதுபற்றி பொதுத் திறைசேரியின் தேசிய வரவு -செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும்.

**11.11 கடன் விண்ணப்பங்களை சமர்ப்பித்தலும் பரிந்துரைக்கும் வழிவகைகளும்**

11.11:1 கடன் விண்ணப்பதாரர் 26 ஆம் பின்னிணைப்பின் படி விண்ணப்பங்களை 3 பிரதிகளில் தயாரித்து திணைக்களத் தலைவர் ஊடாக அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

11.11:2 அமைச்சு, உரிய கடன் விண்ணப்பத்தை காத்திருப்போர் பதிவேட்டில் உள்ளடக்கி 11.10:1 ஆம் பிரிவின் படி வழங்க முடியுமான கடன் தொகையைத் தீர்மானித்து, கடன் விண்ணப்பதாரரின் விருப்

களத்திற்கு அறிவிக்கவேண்டும்.

11.11:5 அமைச்சினால் வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்ட ஒரு கடன் கோரலை மூன்று மாத காலங்களினுள் பெற்றுக்கொள்வதற்காக தேவைப்படும் தகவல்களை வங்கிக்கு வழங்கத் தவறும் சந்தர்ப்பத்தில் வங்கியினால் அவ்விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எக்காரணம் கொண்டும் இக்காலப் பகுதி நீடிக்கப்படாததுடன் அத்தகைய வேண்டுகோள்களும் புதிய வேண்டுகோளாக காத்திருப்போர் பதிவேட்டில் உள்ளடக்கப்படும்.

11.11:6 28ஆம் பின்னிணைப்பின் படி பதியப்பட்டுள்ள வங்கிகளின் மூலம் மட்டும் இக்கடன் பெற்றுக் கொள்ளலாம்.

**02** தாபன விதிக்கோவையின் அத்தியாயம் **XXIV** இன் பிரிவு 11 இன் ஏற்பாடுகள் மற்றும் அவ் ஏற்பாடுகளை திருத்தி 2004.12.31ஆந் திகதி வரை வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாகச் சுற்றிக்கைகளின ஏற்பாடுகளின் படி தற்போதைக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை பாதியாதவாறு மேற்போந்த தாபன விதிக்கோவை திருத்தங்கள் பதிலீடு செய்யப்படுகின்றன.

**03** 2004.12.31 ஆந் திகதியில் அமைசசுத் தலைவர்/ திணைக்களத தலைவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சொத்துக் கடன்களுள வீடமைப்புக்களுக்கான விண்ணப்பங்கள் மற்றும் 2005 ஆண்டில் முன்வைக்கப்படும் விணணப்பங்களுள் வீடமைப்புகளுக்கான வண்ணப்பங்கள் தொடர்பில் மட்டும இச்சுற்றிக்கையின் படி 2005 ஆம் ஆண்டில் செயற்படுதல் வேண்டும்.

# வட்டுக்கோட்டை
# அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
# இரதோற்சவ சிறப்பு மலர் 23.04.2005



## ஆலய வரலாறு

சைவமும் தமிழும் சிறந்தோங்கி விளங்கும் யாழ்ப் பாணத்தின் வலி. மேற்குப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் வட்டுக்கோட்டையில் மாவடி எனும் திவ்விய சேஷ்திரத்தின் மத்தியில் அடைக்கலம் தோட்டம் பதியில் வள்ளி தேவ சேனாபதியாக கந்தசாமியார் கோயில் கொண்டுள்ளார்.

ஆதிவிருட்சமாக விளங்கும் அரச மரத்தடியில் அமர்ந் திருக்கும் எம்பெருமான் ஆதியில் அந்த வீதியால் சென்று கொண்டிருக்கும் பெண்ணொருத்தியை கயவன் ஒருவன் மானபங்கம் செய்ய முற்பட்டபோது அந்தப் பெண் கதறியழ அரச மரத்தடியில் இருந்து குள்ள உருவமாக வெளிப்பட்டு அந்தப் பெண்ணைக் காத்தருளினார். அன்றிலிருந்து மானங் காத்த சுப்பிரமணியப்பிள்ளையார் என்று அழைக்கப்பட் டது. அந்த இடத்தில் சிறு கொட்டிலாக அமைந்த ஆலயம் இன்று முன்னும் பின்னும் இராஜ கோபுரத்துடன் விளங்கு கின்றது. வள்ளி தெய்வ சேனாபதியாக கந்தசாமியார் கோயில் கொண்டு அடியார்களுக்கெல்லாம் அருள் பாலிக் கின்றார்.

இவ்வாலயத்தில் பின்புறத்தில் தல விருட்சமாக அரச மரமும் முன்புறத்தில் "கடம்ப மலர்மார்" என அழைக்கப்படும் முருகனுக்குரிய கடம்ப மரமும், வன்னி, வில்வம், நாகலிங்கப் பூமரமும் கோயில் வீதியில் வேப்புடன் கூடிய அரச மரமும் (அம்பாள் சிவன்) நிற்பது போற்றத்தக்க ஒரு விடயம். போரினால் ஏற்பட்ட அனர்த்தத்தின்போது கூட யாருக்குமே ஒரு தீங்கில்லாமல் காத்தவர்.

தினமும் ஐந்து காலப் பூசை நடைபெறுவது இவ் ஆலயத்திற்குரிய சிறப்பம்சமாகும். மேலும் பன்னிரு மாதங்களிலும் கார்த்திகை உற்சவம், சங்கராந்திப் பூசை, ஐப்பசி வெள்ளிப் பூசை, கந்தசஷ்டி திருவிழா மற்றும் திருவெம்பாவை போன்ற விசேட தினங்களில் பூசைகள் நடைபெறுகின்றன.

ஆலயத்தின் மஹோற்சவம் சித்திரைப் பூரணையைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் இடம்பெறுகிறது. மஹோற்சவத்தைத் தொடர்ந்து சங்காபிஷேகமும் திருக்கல்யாணமும் நடைபெறுகின்றன. இவ்வாலய மஹாகும்பாபிஷேகம் 2002 ஆம் ஆண்டு இளவாலை இராம் பாலசந்திரக் குருக்களினால் வெகு சிறப்பாக நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## மஹோற்சவ குருவின் ஆசிச்செய்தி

முருகன் அடியார்களே!

வட்டு அடைக்கலந்தோட்டம் எனும் பதியில் வீற்றிருந்து வேண்டுவார் வினை தீர்க்கும் கலியுக வரதனாம் ஸ்ரீவள்ளி தேவ சேனா உடனுறையும் சுப்பிரமணியப் பெருமானின் பார்த்திப வருட மஹோற்சவ பெருவிழா மங்களகரமாக நடைபெற்று வரும் வேளையில் பஞ்சகிருத்தியத்தில் ஒன்றான அழித்தலை குறிக்கும் இந்த இரதோற்சவம் நாட்டில் அழிவுகளையும் - தீமைகளையும் மக்களின் துன்பங்களை யும் அழித்து மக்கள் சுபீட்சமாகவும், நாடும் நம் ஊரும் சிறக்க ஷண்முக பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்து ஆசிகூறி அமை கிறேன்.

"லோகா சமஸ்தா சுகினோபவந்து" சுபம்

23.04.2005 சிவாகாமகிரியா தத்வநிதி
சிவசிறி இராம பாலச்சந்திர குருக்கள்
(இளவாலை ஆனைவிழுந்தான் ஆலய ஆதீன குரு, ஆலய மஹோற்சவ பிரதம குரு)

## தேரேறி எம் தீராத்துயர் துடைப்பாய்

எழிலே உருவாக அருளே வடிவாக
இரதந்தனில் பவனி வரும் அடைக்கலந்தோட்டத்து
ஆறுமுகா!

தண்ணொளி வீசும் பூரணத் திங்களின் திருவுருவாய்
மண்ணவர் நம் வல்வினை அறுத்திடுவாய்
அடியவர்களின் 'அரோகரா' ஒலி பெருக
இனிமையின் நாதம் முழங்கிட இனியவன் தேரேறிட
ஞாலமெங்கும் ஞான வெள்ளம் பாய்ந்து
அமைதியும் அறமும் தழைத்து நலம் பெருகட்டும்

மகேந்திரன்
திருவரங்கன்

**படம் - சி.சாந்தன்**
**நன்றிகள் - ம.சசிதரன்**
**ஜெ.ஜெயகிஸ்ணா**

**மலரமைப்பு - R.U. பாலமுருகன்**

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வட்டூரில் அடைக்கலந் தோட்டம் பதியில் கோயில் கொண்டமர்ந்து வேண்டுவன வேண்டும் அடியார்கட்கு வரங்களை வாரி வழங்கிடும் முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சகிதம் தேரேறி அடியவர்கட்கு அருள்பாலிக்கும் திருக்காட்சியை கண்ணார காணும் நாள் இன்றைய இரதோற்சவ நாளாகும்.

இவ்வாலயத்தில் தினமும் ஐந்து கால பூஜைகள் சைவாகம விதிப்படி நடைபெறுகிறது. முதலில் அரச மரத்தின் கீழ் சிறு கொட்டிலில் வைத்து வணங்கப்பட்ட முருகன் தற்போது இரு இராஜகோபுரங்களை கொண்ட ஒரு பெரிய தலமாக மாறியிருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்கட்காக இறைஞ்சும் இவ்வேளை நாட்டில் இன்னுமோர் இயற்கை அனர்த்தம் ஏற்படாதிருக்கவும் வெகுவிரைவில் ஈழமணி நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்பட கலியுகத் தெய்வமாம் இந்தக் கந்தக் கடவுளை பிரார்த்திப்பதோடு இத் தேர்த்திருவிழா சிறப்பு மலர் சிறப்புற அமைய மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி
வணக்கம்

முருகேசு ஜெயநாதன்
செயலாளர் பரிபாலன சபை


**UNIT**
3 வருட முழு உத்தரவாதம்
கொழும்பு விலையில
எமது சேவைகள் பல அவற்றுள் சில:
விற்பனை
★ உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களைத் தெரிவுசெய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
★ கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களின் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்.
★ உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்.
★ வலைபபின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புக்கள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்.
NEW Year offer
நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்
Inkjet Printer/2400 DPI Scanner/
Computer Table/ 600VA UPS
மற்றும் screen Filter, Mouse pad & Dust Cover Totally Free
Hybrid Boost, Hypher Thread, Dual Monitor
புதிய Multimedia Pentium IV கணனிகள்
மூன்றுவருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்
An Indian Engineer's centre
We are entirely different from others
நிபந்தனைக்குட்பட்டது. இச்சலுகை இன்றுடன் முடிவடைகிறது.
Universal Network of Information Technology
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.




**R.S.T**
**N0.1 றோஸ்நாடு**
வகைகளுக்கு நாடவேண்டிய இடம்
**பாலன் அரிசி ஆலை**
மாவடிச் சந்தி வட்டுக்கோட்டை.
**BALAN RICE MILL**
**MAVADI VADDUKODDAI**



**பவித்திரா ஸ்ரோர்ஸ்**
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.



**கண்ணன் ஒலி ஒளி அமைப்பு**
கீரிமலை வீதி, சித்தன்கேணி.



வாகன பற்றரிகள் Level செய்து கொடுக்கப்படும்.
சகல விதமான பற்றிகளும் திருத்தியும், சார்ஜ் செய்தும் கொடுக்கப்படும். பற்றிகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
வட்டுக்கோட்டையில் முன்னணி நிறுவனம்
**K.S பற்றரி சேவிஸ் & சார்ஜ்**
(சங்கரத்தை சந்திக்கு அருகாமையில்)
தெல்லிப்பழை வீதி, வட்டுக்கோட்டை.



கந்தனின் ரத பவனியினால் பாரெங்கும் சாந்தியும் சமாதானமும் கிடைக்க அருள்புரிவான்
**K.P TRAVELS & CATERING SERVICE**


**எமது சேவைகள் :யாழ் ⇄ கொழும்பு**
A.C சொகுசு வான் பஸ் சேவைகள், 24 மணி நேர ஆட்டோ சேவை, திருமண வைபவங்கள் சகல மங்களகரமான வைபவங்களுக்கும் உணவு வகைகளினைக் குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் ஓடர்மூலம் செய்து கொடுக்கப்படும்.
உங்கள் தொடர்புகளிற்கு:-
Mobile-0777 731874, T.P.No. 021 2223038/ 3839, (யாழ்ப்பாணம்)
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. 011 2441398 (கொழும்பு)



★கட்டடப் பொருட்கள் ★பெயின்ற் வகைகள்
போன்றவற்றை நிதான விலையில் ஓரிடமாகப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**
CALTEX 2T ஒயிலுக்கான வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
இல. 147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P :- 021 222 2833

# எமது பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்காவிடின் விடுதலைக்கான போராட்டமே எமக்கு சிறந்த ஒரே வழி

## சண்டிலிப்பாய் பொது அமைப்புகள் ஐ.நா.செயலருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வினை வழங்க அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானிடம் வேண்டுகோள் விடுத்துள்ள சண்டிலிப்பாய் பொது அமைப்புகள், பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்காவிடின், விடுதலைக்கான போராட்டம் ஆரம்பிக்கப்படுவதைத்தவிர சிறந்த வழி இருக்காது எனவும் சுட்டிக்காட்டியுள்ளன.**

நேற்று முன்தினம் அரசுக்கு எதிராக சண்டிலிப்பாயில் நடாத்தப்பட்ட கண்டனப் பேரணியின் இறுதியில் சண்டிலிப்பாய் பொது அமைப்புகளால் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்ட மகஜரிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம், யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம், வலி. தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் சங்கானை பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம், வலி.மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என்பன கையளித்துள்ள மகஜர்களின் விபரம் வருமாறு,

### சண்டிலிப்பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம்

வலிகாமம் சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து அல்லலுறும் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளையும், எமது மக்களின் அபிலாசைகளையும், பிரதிபலிக்கும் இப்பேரணியின் முடிவில் இம் மகஜரைச் சமர்ப்பிக்கின்றோம்.

எவ்வித மனித நேயமான விட்டுக்கொடுப்புமின்றி ஸ்ரீ லங்கா பேரினவாதம் வெறித்தனமாக எம்மீது போரைத் திணித்துள்ளது. அதன் காரணமாகத் தமிழ் மக்கள் தத்தமது வாழ்விடங்களை விட்டுத் துரத்தப்பட்டதனை சர்வதேசமும் அறியும். இடம்பெயர்ந்து வாழும் வாழ்க்கை எனும் மனித அவலம் தொடர்கதையாகிவிட்டது.

நாம் தொழில்செய்த கடலை, எமது விவசாய விளை நிலங்களை, குடியிருந்த வீடு வாசல்கள், பாடசாலைகள், தேவாலயங்கள், தொழிற்சாலைகள் யாவற்றையும் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயங்கள் விழுங்கிவிட்டன. இதனால்தான் ஸ்ரீலங்காப்படைகளை நாம் ஆக்கிரமிப்புப்படையாகப் பார்க்கின்றோம்.

போர்நிறுத்தம் கைச்சாத்தாகி மூன்று வருடம் கழிந்த நிலையிலும், இராணுவ அடாவடித்தனங்கள் தொடர்கின்றன. சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து ஸ்தம்பிதம் அடைந்து விட்டன. சமாதானத்தின் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை சரிவடைந்து வருகின்றது.

எனவே தான் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். நாம் சமாதானத்தையே விரும்புகின்றோம் என்ற காரணத்தாலும் பின்வரும் கோரிக்கைகளை தாங்கள் முன்வைக்கிறோம்.

* தமிழீழத்தின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தினை வழங்க வேண்டும். இதுவே நிரந்தர சமாதானத்தின் மீது நம்பிக்கையை உருவாக்கும்.

* இடம்பெயர்நத மக்களை மீளக்குடியமர அனுமதித்து அவர்களது இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும்.

* பொதுக்கட்டமைப்பை உருவாக்கி அதன்மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு புனர்வாழ்வு உதவிகளைக் கிடைக்கச் செய்யவேண்டும்.

* போராளிகளையும், ஊடகவியலாளர்களையும், பொதுமக்களையும் படுகொலை செய்வதனை உடன் நிறுத்த உடன்படிக்கைகளை முழுமையாக நடைமுறைப் படுத்தி, இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த வேண்டும்.

எமது எதிர்பார்ப்புக்கள் கைக்கு எட்டாமல் போகுமானால் நாம் எமது சுதந்திரமான வாழ்வுக்காக எமது அபிலாஷைகளை நிறைவுசெய்ய நாம் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் போராட்டத்தினை முன்னெடுப்பதைத் த்விர வேறு மார்க்கம் எதுவும் இல்லை என்பதனைப் பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

### யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம்

அராஜகம் அழிய வழி செய்யுங்கள் ஈழத்தமிழினம் சிங்களப் பேரினவாத கொடுங்கோலாட்சியால் 1948 இல் இந்நாடு சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்றுவரை இனப்படுகொலைக்கு இரையாகி வருகிறது. இதற்கு எதிராக அகிம்சையில் போராட்டத்தை முன்னெடுத்தபோது அதன் தாற்பரியத்தைப் பேரினவாத அரசாங்கம் புரிந்து கொள்ள மறுத்ததால் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆயுதப் போராட்டம் நியாயமானது என்பதனையும் தமிழ் மக்கள் அதைதவிர்க்கமுடியாத நிலையிலேயே மேற்கொள்கின்றனர் என்பதனையும் சர்வதேச சமூகம் உணரத்தலைப்பட்டது. தாங்களும் உண்மை நிலையை உணர்ந்துள்ளீர்கள் என்பதை வெளிக்காட்டியுள்ளமைக்கு எமது இனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆயுதப் போராட்டத்துக்கு முகம் கொடுக்கமுடியாத சிங்கள அரசாங்கம், யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், பேச்சுவார்த்தை என்றெல்லாம் பிரகடனங்களை செய்து சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத்தூவிக் கபடநாடகமாடி இழுத்தடிப்புக்களைச் செய்து தொடர்ந்து இன ஒழிப்பில் ஈடுபட்டுவருகிறது. மீண்டும் ஆயுதம் தூக்கும் நிலையை உருவாக்கிவருகிறது.

கடந்த 20 ஆண்டுகளாக போரின்கொடுமையால் நாடிழந்து, வீடிழந்து, நாடித்துடிப்பிழந்து நாடோடிகளாக நாம வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உயர்பாதுகாப்பு வலயம் என்ற இரும்புத்திரை போடப்பட்டுள்ளதால் சொந்த மண்ணில் வாழும் அடிப்படை மனித உரிமையைக்கூட இழந்து, அகதிகள் முகாம்களிலும் குடில்களிலும் எதிலிகளாக வாழ்வோர் தொகை பல்லாயிரமாகும்.

சுனாமி அலையால் மேலும் மேலும் துன்பங்களுக்கு உட்பட்டுள்ளோர் தொகைகளும் பல்லாயிரமாகும். வாழ்வா சாவா என்ற விரக்தியிலிருந்து இம் மகஜரை தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். மீண்டும் ஆயுதந்தூக்கும் நிலையை தாங்களும் விரும்ப மாட்டீர்கள், நாமும் விரும்பவில்லை.

எனவே பசப்புவார்த்தைகளையும், இழுத்தடிப்புகளையும் ஆயுதமாகக்கொண்டு செயற்பட்டுவரும் பேரினவாத ஆட்சியாளாக்களுக்கு தாங்களும் தங்கள் சபையும் அழுத்தம்கொடுத்து எமது விடிவுக்கு வழிசெய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

* விடுதலைப்புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை ஒப்படைக்கவேண்டும்.

* இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும்.

* தமிழ் மக்கள் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் துணைப்படை ஊடாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும்.

* சுனாமிப்பேரலை நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக்கட்டமைப்பை உடனே ஏற்படுத்தவேண்டும்.

* எமது மண்ணை ஆக்கிரமித்துள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளை உடன்மேற்கெள்ள அழுத்தங்கொடுத்து எமது விடிவுக்கு வழிசெய்யும்படி புனர்வாழ்வு முகாம்களில் வாழும் பல்லாயிரம் மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.

### வலி.தென்மேற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் உள்ள 9 கடற்றொழிலாளர் சங்கங்களை உள்ளடக்கிய சமாசத்தினராகிய நாம் எமது பகுதி மக்கள் படும் அவலங்களையும், அவர்களின் எதிர்பார்ப்புக்களையும் தங்களின் மேலான கவனத்திற்குத் தருகின்றோம்.

கடந்த பல ஆண்டுகளாக உயர்பாதுகாப்பு வலயம், கடல்வலயச் சட்டம் போன்றவற்றினாலும் இராணுவம், கடற்படையினரின் நடவடிக்கைகளினாலும் நாம் எமது வாழ்விடங்களையும் தொழில் முயற்சிகளையும் இழந்து மிக மோசமான அவல வாழ்விற்குள் தள்ளப்பட்டுள்ளோம். தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பாதிப்படைந்த எமக்கு தற்போது ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ஒரு விடிவு கிட்டும் என எதிர்பார்த்திருந்தோம்.

ஆனால், ஸ்ரீலங்கா படையினர் தமது நடவடிக்கையில் எந்த ஒரு தளர்வையும் ஏற்படுத்தாது மேலும் கட்டுப்பாடுகளை விதித்து பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர். எமது எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமாகிவிட்டன.

மேலும் சுனாமிப் பேரலைத் தாக்கம் வடகிழக்கில் வாழும் மக்களுக்கு பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி உள்ளது. இதற்கான உதவிகளை சர்வதேச சமூகம் வழங்க முன்வந்தபோதும் ஸ்ரீலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசி ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்காமல் இருப்பதனால் அவ்வுதவிகள் கிட்டாமலே உள்ளன.

இங்கு வழங்கப்பட்ட உதவிகள் கூட எமக்குக் கிட்டாமலே போய்விட்டது. இன்நிலையிலேதான் எமது அபிலாஷைகளைப் பின்வரும் கோரிக்கைகளாக முன்வைக்கின்றோம்.

* நிரந்தர சமாதானத்தை எட்டுவதற்கான பாதையை வகுப்பதற்கு தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி நிர்வாகத்தை வழங்க வேண்டும்.

* விடுதலைப்புலிகளால் முன்மொழியப்பட்ட பொதுக் கட்டமைப்பை பொருத்தமான வகையில் உருவாக்கி அதன் மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான நிவாரண புனரமைப்புச் செயற்பாடுகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

* இடம்பெயர்ந்த எமது மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதித்து அவர்களிற்கு இயல்பு வாழ்வை ஏற்படுத்த வேண்டும்.

* கடல் வலையச்சட்டம், படையினரின் எல்லை மீறிய நெருக்குவாரங்களை நிறுத்தி எமது கடலில் நாம் சுதந்திரமாகத் தொழில்செய்ய அனுமதிக்க வேண்டும்.

* இராணுவத்துணைக்குழுக்கள் இராணுவத்துடன் இணைந்து போராளிகளையும், ஊடகவியலாளர்களையும், அப்பாவிப் பொதுமக்களையும் படுகொலை செய்வதனை உடன் நிறுத்த நடவடிக்கையெடுத்தல்.

இவ்விடயங்களைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து எமது எதிர்பார்ப்புக்களை நிறைவுசெய்து நின்மதியாக நாம்வாழ ஆவன செய்வீர்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

(ஏனைய மகஜர்கள் நாளை வெளிவரும்)

# மாணவர்களுக்கு இலவசக் கல்வி முழுமையாகச் சென்றடைய வேண்டும்

## கல்வி அமைச்சின் செயலாளர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

இலவசக்கல்வி மாணவர்களுக்கு முழுமையான முறையில் சென்றடைய கல்விப் பணிப்பாளர்கள் வழிவகுக்கவேண்டுமென வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த 18,19ஆம் திகதிகளில் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெற்ற கல்விப் பணிப்பாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

பாடசாலை நேரத்தில் கற்பிப்பதற்கு மாணவர்களிடம் இருந்து எந்த நிதியும் அறவிடப்படக்கூடாது. அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வி முழுமையான முறையில் சென்றடைய வேண்டும்.

மேலும், அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் தவிர்ந்த வேறு எந்த நபர்களைக் கொண்டும் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக்கூடாது.

அவ்வாறு எந்தப் பாடசாலைகளிலாவது இவ்வாறானவர்கள் கற்பிப்பதற்கு அனுமதிக்கப்படடிருந்தால், அவர்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் கல்விப் பணிப்பாளர்களுக்கு செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

(ந-19)

# க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த யாழ் . கல்வி வலய மாணவர்களின் விபரம்

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இம்முறை க.பொ.த (சா/த) பரீட்சைகுத் தோற்றிய மாணவர்களில் A, B, C, S சித்திபெற்றவர்களின் தொகையும் பரீட்சைகளில் சித்தியெய்தியவர்களது விகிதாசாரங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ் விபரங்கள் அடங்கிய அட்டவணை கீழே தரப்படுகிறது.

| பாடங்கள் | தோ.தொகை | A | B | C | S | W | சித்தி % |
|---|---|---|---|---|---|---|---|
| இந்துசமயம் | 2869 | 1005 | 333 | 597 | 567 | 367 | 87.21 |
| தமிழ்மொழியும் இலக்கியமும் | 3673 | 578 | 565 | 983 | 909 | 638 | 82.63 |
| ஆங்கிலம் | 4098 | 183 | 173 | 480 | 933 | 2329 | 43.17 |
| விஞ்.தொழில்நுட்பம் | 3699 | 242 | 269 | 590 | 673 | 1925 | 47.96 |
| கணிதம் | 3842 | 534 | 273 | 555 | 711 | 1769 | 53.96 |
| ச.கல்வியும் வரலாறும் | 3665 | 204 | 366 | 887 | 991 | 1217 | 66.79 |
| சித்திரம் | 1438 | 08 | 25 | 136 | 485 | 784 | 45.48 |
| சங்கீதம் | 1533 | 282 | 159 | 203 | 434 | 455 | 70.32 |
| நடனம் | 547 | 49 | 51 | 106 | 152 | 189 | 65.45 |
| ஆங்கில இலக்கியம் | 157 | 17 | 09 | 30 | 39 | 62 | 60.51 |
| விவசாயம் | 820 | 31 | 80 | 203 | 229 | 277 | 66.22 |
| மனையியல் | 695 | 02 | 11 | 65 | 252 | 365 | 47.48 |
| வர்த்தகமும் கணக்கீடும் | 1991 | 189 | 255 | 473 | 406 | 668 | 66.45 |

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

(தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 46



2) செயலாளர் நாயகம் வாக்குகளின் எண்ணிக்கையை அறிவிப்பார். அவ்வாக்குகள் சம அளவானவையாயிருப்பின் சபாநாயகர் தமது தீர்வு வாக்கை அளிப்பார். வாக்கெடுப்பின் முடிபை அதன் பின்னர் சபாநயகர் பிரகடனஞ் செய்வார்.

43) தமது அபிப்பிராயத்தில் ஒரு வாக்கெடுப்பு அனாவசிமாகக் கோரப்படுகின்றதெனச் சபாநாயகர் கருதினால், வாக்கழைப்பு மணி அடித்து முடிந்ததும் தமது தீர்மானத்தை ஆதரிப்பவைகளையும் ஏற்க மறுப்பவர்களையும் முறையே தத்தம் இடங்களில் எழுந்து நிற்கும்படி அழைத்து வாக்கெடுத்துத் தாம் உகந்ததெனக் கருதும் வகையில் ஒன்றில் வாக்குகளை எண்ணியதன் பின் பாராளுமன்றத்தின் முடிவைப் பிரகடனஞ்செய்வார். அல்லது உறுப்பினரின் பெயர்களை அழைத்து வாக்கெடுக்கும்படி செயலாளர் நாயகத்தைப் பணிப்பார்.

44) ஓர் உறுப்பினர் தாம் தவறாக வாக்களித்துவிட்டதாகவோ தம்முடைய வாக்குப் பிழையாக எண்ணப்பட்டு விட்டதாகவோ கூறினால், தம்முடைய வாக்கைத் திருத்திக் கொள்ள அவர் உரிமை கோரலாம். ஆனால் வாக்குகளின் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டவுடனும் சபாநாய்கர் வாக்கெடுப்பின் முடிவைப் பிரகடனம் செய்ய முன்னரும் அவ்வாறு கோரவேண்டும்.

### சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடைமுறை

45) அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய, முன்னறிவித்தலின் பின்னர் அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர், சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்றத்தின் கட்டளையின்றியே ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்கலாம். இவ்வாறு ஒரு சட்டமூலத்தைப் பொது அலுவல் ஆரம்பத்தில் சமர்ப்பிக்கும் பொழுது செயலாளர் நாயகம் சட்டமூலத்தின் சட்டப்பெயரை வாசிப்பார். இது அந்தச் சட்டமூலத்தின் முதல் மதிப்பீடெனவும் அதை அச்சிடும்படி கட்டளையிடப்பட்டதாகவும் கருதப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வாரத்திற்கு முற்படாத ஒரு தேதியில் அது இரண்டாம் மதிப்பீட்டை எதிர்நோக்கி நிற்றல் வேண்டும்.

எனினும், அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையில், குறிப்பிடப்பட்டுள்ள அவசரச் சட்டமூலமொன்றின் விடயத்தில் அமைச்சரவையின் ஓர் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் நியமிக்கும் ஒரு நாளில் அச்சட்ட மூலம் இரண்டாம் மதிப்பீட்டை எதிர்நோக்கி நிற்றல் வேண்டும்.

### அவசரச் சட்டமூலங்கள்

46) ஒரு சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி பிரதம நீதியரசருக்குச் செய்த ஆற்றுப்படுத்தலின் பிரதி ஒன்று சபாநாயகருக்குக் கிடைக்கும்போது அரசியலமைப்பின் 122 (1) ஆம் உறுப்புரையின் கீழ் தேசிய நலனைக் கருதி அவசரமானது என அமைச்சரவை கருதுமிடத்து, அத்தகைய சட்டமூலம் அரசியலமைப்பின் 122 (1) (இ) உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான அறிவுரை உயர் நீதிமன்றத்திடமிருந்து சபாநாயகருக்குக் கிடைக்கும் வரை ஒழுங்குப் பத்திரத்தில் ஈடுபடுதல் ஆகாது.

### ஒருங்கயை நிரலிலுள்ள விடயங்கள் சம்பந்தமான சட்டமூலங்களும் உத்தேச நியதிச்சட்டங்களும்

46 அ (1) அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் 3 ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் சம்பந்தமான ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்பொழுது, பாராளுமன்றம் வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, இந்த கட்டளையின் 2 ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) சபாநாயகர், சொல்லப்பட்ட சட்டமூலத்தின் பிரதிகள் ஒவ்வொரு மாகாண சபைக்கும் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்துள் அல்லது பாராளுமன்றம் குறித்துரைக்கக் கூடிய அத்தகைய காலப்பகுதிக்குள், அச்சட்டமூலம் பற்றிய அதன் கருத்துகளை அம்மாகாண சபை பாராளுமன்றத்துக்கு அறிக்கை செய்வதற்கென அச்சட்டமூலத்தின் பிரதிகளை அம்மாகாண சபைக்கு அனுப்புமாறு செயலாளர் நாயகத்துக்குப் பணிப்புரை வழங்குதல் வேண்டும்.

(ஆ) மேற்காட்டிய (அ) இல் குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவடைவதன் மேல் அல்லது மாகாண சபையின் கருத்துக்கள் கிடைக்கப்பெறுவதன்மேல், இவற்றுள் எது முந்தியதோ அப்பொழுது, பாராளுமன்றம் அச்சட்ட மூலம் சம்பந்தமாக நடவடிக்கையெடுக்க முற்படலாம்.

(3) (அ) ஒரு மாகாண சபை, அரசியலமைப்புக்கான ஒன்பதாம் அட்டவணையின் 3 ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் உத்தேச நியதிச் சட்டம் பற்றிப் பாராளுமன்றத்தின் ஆலோசனையைப் பெற விளைவதாக எப்பொழுதாயினும் அச்சபையிடமிருந்து செய்தி கிடைக்கும் பொழுது சபாநாயகர், கிடைக்கக்கூடிய முதல் சந்தர்ப்பத்திலேயே, அந்தச் செய்திகிடைத்தமை பற்றி அறிவித்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதும் அச்செய்தி ஒரு நிலையியற் குழுவுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம், அக்குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர், உத்தேச நியதிச்சட்டம் பற்றிய பாராளுமன்றத்தின் கருத்துக்களைச் சம்பந்தப்பட்ட மாகாண சபையின் செய்தி கிடைத்த ஒரு மாத காலத்துள் அனுப்புமாறு செயலாளர் நாயகத்துக்குப் பணிப்புரை வழங்குதல் வேண்டும்.

### தனியார் உறுப்பினரின் சட்டமூலங்கள்

47) (1) ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்க விரும்பும் தனியார் உறுப்பினர் எவரும், சட்டமூலத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைத் தெரிவித்து அச்சட்ட மூலத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஒரு பிரேரணை உருவில் தயாரிக்கப்படுவதுடன் அவ்வாறு விண்ணப்பிக்கும் அவ்வுறுப்பினர் அதே சமயத்தில் உத்தேச சட்டமூலத்தின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் சிங்களத்திலும், தமிழிலும் பிரதியொன்றை அப்பிரேரணையின் பிரதியுடன் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(3) அச்சட்டமூலம் சிங்களத்திலும், தமிழிலும் அதன் மொழி பெயர்ப்பு ஆங்கிலத்திலும் கசெற்றில் வெளியிடப்படுவதற்குச் செயலாளர் நாயகம் வகை செய்தல் வேண்டும்.

(4) சட்ட மூலம் கசெற்றில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள் கழிந்ததன்றத்தின் சிறப்புரிமைகளை நேரடியாகத் தழுவிய ஓர் அவசரப் பிரேரணை முன்னிடையும், பிரேரணை பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(5) பிரேரணை ஒன்று சபைக்கு விடப்பட்டு, அது ஏற்றுக் கொள்ளப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டதும், சட்டமூலம் முதல் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்குக் கட்டளையிடப்பட்டதாகக் கருதுவதுடன், அதன் மீது விவாதமெதுவும் மேற்கொள்ளப்படாது. சட்டமூலங்கள் விளக்கும் விடயங்கள் கருமங்களுடன் சம்பந்தப்பட்ட அமைச்சரவையின் அமைச்சருக்கோ அல்லது பிரதியமைச்சருக்கோ, அத்தகைய அமைச்சரவையின் அமைச்சரோ பிரதி அமைச்சரோ இல்லாதவிடத்து சபாநாயகர் நியமிக்கும் அமைச்சரவையின் வேறொரு அமைச்சருக்கோ அல்லது பிரதியமைச்சருக்கோ ஆற்றுப்படுத்தப்படுவதுடன், அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சரவையின் அமைச்சரோ அல்லது பிரதியமைச்சரோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் வரை அச்சட்ட மூலத்தின் மீது மேல் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

(தொடரும்)


# சட்டவிரோதமான முறையில் காணி உறுதியொன்றை எழுதிய சட்டத்தரணி கைது

(கொழும்பு)

போலி ஆவணங்களைத் தயாரித்து போலியான காணி உறுதியொன்றை எழுதியது சம்பந்தமாக கண்டியைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் கண்டி குற்றத்தடுப்பு மோசடிப் பிரிவினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டி பெரல்லகம பிரதேசத்தில் உள்ள ஒரு நபருக்குச் சொந்தமான காணியை மற்றொரு நபரின் பெயருக்கு மாற்றி அதனைத் தயாரித்து 16 ஆயிரம் ரூபாவுக்கான முத்திரையையும் ஒட்டியதாக இந்தச் சட்டத்தரணி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தரணிக்கு உதவியதாகக் கருதப்படும் மற்றும் ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். (க-5)



51ஆவது சேனையக சேனாதிபதியின் மேற்பார்வையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கடந்த புதன்கிழமை இராணுவத்தினரால் இரத்த தானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வுக்காட்சியைப் படத்தில் காணலாம்.

## தீர்த்தத் திருவிழாவும் பூரணை விழாவும்

ஏழாலை வடக்கு துவரக்கேட்டி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தீர்த்தத்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அத்துடன் அன்றைய தினம் சித்திரைப்பூரணை விரத விஷேட அபிஷேக ஆராதனைகளும் நடை பெறவிருக்கின்றது. (க-131)

## ஆன்மீக உரை

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் ஆன்மீக சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்பவரும் பகவானின் போதனைகளை அடியார்களுக்குத் தனது சிறப்பான சொற்பொழிவுகள் மூலம் அறியத் தருபவரும், பிருந்தாவன 'பிரசாந்தி நிலையம்' ஸ்ரீ சத்திய சாயி உயர் கல்வி படிப்பு பல்கலைக் கழகத்தில் தாவரவியல் பேராசிரியருமான கா.அனில் குமாரின் ஆன்மீக உரை எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 4.00 மணிமுதல் 6.45 வரை இந்து மகளிர் கல்லூரியில் விசாலாட்சி சிவகுருநாதர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ற)

## திருவிளக்குப் பூசை

திருநெல்வேலி அருள்மிகு முத்துமாரி அம்மன ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் திருவிளக்குப் பூசை நாளை ஞாயிற்றுக்கிழமை சித்திராப்பௌர்ணமி தினத்தன்று மாலை 400 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-27)

## தொண்டர்ஆசிரியர் ஏமாற்றம்

(கோப்பாய்)

கோப்பாய்க்கோட்ட பாடசாலைகளில் கடமையாற்றிய தொண்டர் ஆசிரியர்களில் மூவருக்கு மட்டுமே அண்மையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகக் கடமையாற்றிய நிரந்தர நியமனத்திற்குத் தகுதியுடைய பல தொண்டர் ஆசிரியர்கள் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் நிரந்தர நியமனம் வழங்கப்படாததால் மிகவும் ஏமாற்றம் அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (7-79)

## சித்திரைப் பூரணைதினவிழா

ஏழாலை மத்தி ஸ்ரீஅன்மைகேஸ்வரர் ஆலயத்தில் சித்திரைப் பூரணை தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை விசேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெறும்.(க-131)

## துப்பாக்கியுடன் விவசாயி கைது

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் பாஞ்சாலகொடவில் சிறிய ரக துப்பாக்கியுடன் விவசாயி ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கிளிவெட்டி பாரதிபுரத்தைச் சேர்ந்த கே.யோகேந்திரன் வயது 54 என்பவரே கைதுசெய்யப்பட்ட விவசாயி என்று கந்தளாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த புதன்கிழமைமாலை வீதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இவர் காட்டுயானைகளிடமிருந்து பயிர்களைக் காப்பாற்றுவதற்காக இத்துப்பாக்கியை வைத்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

- நேற்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைககுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)

## சமுகமளிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நீருயிர் வளத் தொழில் நுட்ப ஆசிரியர்களாகக் கடமையாற்றும் சகல ஆசிரியர்களையும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பிப்பது தொடர்பாக நியமனக் கடிதப்போட்டோப் பிரதியுடன் இன்று காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்திற்கு சமுகம் தருமாறு நருயிர வள ஆசிரியர் சங்கத் தலைவர் கே.பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (க)

## தேர்த்திருவிழா

(நல்லூர்)

யாழ்ப்பாணம் நல்லூர் கையிலாசபிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று காலை 7.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை காலை 10.00 மணிக்கு தர்ததோற்சவமும் நடைபெறவுள்ளன. (க-27)

## நிதி ஒதுக்கீடு

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜி.கஜேந்திரகுமார் துன்னாலை வடக்கு வல்லியானந்தம் சனசமூக நிலையத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இந்நிதி மூலம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு பணமின்மையால் இடை நிறுத்தப்பட்ட சனசமூக நிலைய புதிய மண்டப கட்டட வேலைகள் தொடரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-7-101)

## இன்று ஒரு தகவல்

# இடதுகைப் பெருவிரல்

"இதோ இருக்கிறாரே இவர் என்னுடைய வலதுகை" என்று அறிமுகப்படுத்திக் கொள்வதுண்டு சிலபேரை. அப்படியென்றால் என்ன அர்த்தம்? அவர் உருவம் பாரபபதற்கு வலதுகை மாதிரி இருக்கிறது என்றா அர்ததம்? அவர் த்லை இருக்கவேண்டிய இடத்தில் ஐந்து விரலா இருக்கும்? அப்படிஇல்லை. மிகவும் நெருக்கமானவர், நம்பிக்கைக்குரியவர் என்று அர்த்தம். அவர் இல்லாமல் நான் இல்லை என்று அர்த்தம்!

நம்பிக்கைக்குரியவர் என்று சொல்வதற்கு வலது கையை ஒப்பிடுவது வழக்கம். ஆனால் நம்பிக்கைக்கு உரியது வலது கையா? இடதுகையா என்று ஒரு கேள்வி கேட்டால் இடதுகை என்று தான் சிலா் பதில் கூறுவார்கள். ஏன் தெரியுமா? பத்திரங்களை எழுதிப் பதிவுசெய்கிறோமே அதில் எந்தவிரல் ரேகையைப் பதிவு செய்கிறோம்? இடது கைப் பெருவிரல் ரேகையைத்தானே! அதனால் இடதுகைதான் நம்பிக்கைக்குரியதென்று அவர்கள் கூறுகின்றனர்.

இப்படிச் சொல்பவர்கள் யார் என்று நினைக்கிறீர்கள்? விரல் ரேகைப் பதிவு கூடத்தில் வேலை செய்பவர்கள் தான். அவர்களைச் சந்திப்பதற்கு முன் எனது நண்பன் ஒருவனைச் சந்தித்துக் கதைத்துக் கொண்டிருந்தேன். அந்த நண்பன் ஒரு மாதிரியானவன். என்ன கேள்வி கேட்டாலும் எனக்குத் தெரியவில்லை என்று சொல்லவே மாட்டார். ஏதாவது ஒரு பதிலைச் சொல்வார். அது சரியா? தவறா என்று யோசிக்கமாட்டார்.

அவரிடம் அன்று கேட்டேன் "ஏன் சார்? முக்கியமான ஆவணங்களிலெல்லாம் இடதுகைப் பெருவிரல் ரேகையைப் பதிவு செய்கிறோமே அது எதனால் ? என்று கேட்டேன. "வலது கை சாப்பிடும் கை! அதில் மை தடவினால் அதைக் கழுவுவதற்குச் சிரமமாக இருக்கும். அதனால் தான் இடதுகை விரலை உபயோகப்படுத்துகிறோம்" என்றார்.

சரி இதற்கு மேல் இவரிடம் பேசவேண்டாம் என்று விட்டுவிட்டேன். அதன்பின் விரல் ரேகைப் பதிவுக் கூடத்தில வேலை செய்யும் சிலரைச் சந்தித்து விபரம் கேட்டேன். அவர்கள் தான் சரியான விபரம் கூறினார்கள். முதலில் நாம் எதற்காக குறிப்பாக பெருவிரல் ரேகையை மட்டும் ஆவணங்களில் பதிவு செய்கிறோம்? மற்ற நான்கு விரலில் ரேகை இல்லையா? இருக்கிறது! இருந்தாலும் தாராளமாக இல்லை!

மற்ற விரலைக் காட்டிலும் பெருவிரல் பெரிது. அதனால தான அதற்கு அந்தப் பெயர். மற்ற விரலை விடவும் பெருவிரலில் அதிகமான விரல் கோடுகள் உள்ளன. இப்படி அதிகமாக இருப்பதனால் அது நிபுணர்கள் நுணுக்கமாக ஆராய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கும். அதனால் தான் பெருவிரலுக்கு அதிகமுக்கியத்துவம் கொடுக்கின்றார்கள்.

மற்ற விரல்களை விட பெருவிரல் மிகவு வசதியாக இருக்கிறதென்பது சரி.... அதற்கு வலதுகையிலுள்ள பெருவிரலை உபயோகப்படுத்தினால் என்ன? எதற்கு இடதுகையிலுள்ள பெருவிரலை மட்டும் உபயோகப்படுததுகிறார்கள்? இதற்கும் ஒரு காரணம் உண்டு. நாம் சாதாரணமாக தினசரி வேலைகளுக்கு அதிகமாக உபயோகப்படுத்தும் கை எது? வலதுகை! வலது கையை அதிகமாக உபயோகப்படுத்துவதனால் அந்தக் கையிலுள்ள விரல் ரேகைகள் தேய்ந்துவிடச் சந்தர்ப்பம் அதிகம்.

அதனால் ரேகைக் கோடுகள் தெளிவில்லாமல் போகலாம். ஆனால் இடதுகையை நாம் அதிகமாக உபயோகப்படுத்தாத காரணத்தால் இடதுகைப் பெருவிரல் ரேகையின் கோடுகள் தெளிவாகக் கிடைப்பதற்கு வாயப்புகள் அதிகம். அதுமட்டுமல்ல அடிக்கடி உபயோகப்படுத்துவதனால் விபத்தில் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பும வலதுகைக்கு அதிகம். இடதுகைப் பெருவிரல் ரேகைக்கு முக்கியத்துவம் கொடுப்பது இதனால் தான்.

ஒரு ஆள் வந்தான். அவனுக்கு இடதுகையில் கட்டைவிரல் இல்லை. "என்ன ஆயிற்று?" என்று விசாரித்தார் ஒரு பெரியவர். "ஒரு இயந்திரத்தில் தவறுதலாகக் கையை விட்டுவிட்டேன்" என்றான் அவன். "நல்ல வேளை! வலதுகைக் கட்டைவிரல் போயிருந்தால் சாப்பிடவே முடியாமல் போயிருக்கும்" என்றார் பெரியவர். "ஆமாம் சார்! முதலில் வலதுகைதான் இயந்திரத்தில் மாட்டிக் கொள்ள இருந்தது! நீங்கள் சொன்னது போல் நானும் யோசித்துப் பார்த்துவிட்டுத்தான் புத்திசாலித்தனமாக வலதுகையை இழுத்துக்கொண்டு இடதுகையைக் கொடுத்துவிட்டேன்" என்றான் அந்த ஆள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தீவகத்தில் எழுச்சியுடன் நடந்த மாபெரும் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

வேலணையில் நேற்றுமுன்தினம் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது. தீவகங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றிய இப் பேரணியானது காலை 10.00 மணிக்கு வேலணைத் துறையூரில் இருந்து ஆரம்பமாகி வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் தன்னாடசி அதிகார சபையை வழங்கவேண்டும், கிழக்கில் விடுதலைப் புலிப் போராளிகள், ஊடகவியலாளர்கள், நிர்வாக அதிகாரிகள மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்,

உலர் உணவு நிவாரணம் அனைவருக்கும் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்காக பொதுக் கட்டமைப்பை உடன் ஏற்படுத்த வேண்டும்.

மற்றும் மீளக்குடியமர்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இராணுவ நெருக்கடிகள் நீக்கப்பட வேண்டும், கடற்றொழிலாளர் சுதந்திரமாக கடற்றொழிலை மேற்கொள்வதற்கு கடற்படையின் கட்டுப்பாடு அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகம் என்பவற்றின் ஏற்பாட்டில் இப்பேரணி நடாத்தப்பட்டது.

இப்பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின பாராளுமனற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, மா.க. ஈழவேந்தன், பதமினி சிதம்பரநாதன், சிவநேசன் மற்றும் யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் கனகலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இப்பேரணியில் கலந்துகொண்ட மக்கள்,

"விளை நிலங்களை விளைவிக்க அனுமதி"
"அரசே! நிறுத்திய நிவாரணத்தை மீளவழங்கு"
"கடற்படையே கடற்றொழிலைச் செய்யவிடு"
"சிங்கள அரசே கபடநாடகத்தைக் கைவிடு"
"வெட்டாதே வெட்டாதே நிவாரணத்தை வெட்டாதே"
"இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை உடனடியாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளி"

போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளைத் தாங்கியிருந்தனர்.

இப்பேரணியின் இறுதியில் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை ஐ. நா. செயலாளர்களுக்காக தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பகத் தலைவர் த.தனேந்திரன, தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் த.சத்தியதாசன் ஆகியோர் வேலணைப் பிரதேச செயலர் நந்தசேகரத்திடம் கையளித்தனர்.

இம் மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி,இலங்கைக்கான அனைத்து வெளிநாட்டுத் தூதுவராலய உயர்ஸ்தானிகர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வதிவிடப்பிரதிநிதி ஆகியோருக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ற-19)

# இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தொடர்ந்தும் உதவிவழங்கத் தயார்!

## சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதி உறுதிமொழி

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரத்தை வலுவூட்டவும் அதனை வளாச்சியடையச் செய்யவும் இலங்கை ஏடுக்கும் முயற்சிகளுக்காக எதிர்வரும் காலங்களிலும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவிருப்பதாக சர்வ்தேச நாணய நிதியம் உறுதியளித்துள்ளது.

சர்வதேச நாணயநிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளருக்கும் நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுக்குமிடையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே நிதியத்தின் பணிப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வளம் மற்றும் நிதிக்குழுவின் 24ஆவது குழுக் கூட்டத்திலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின் போது சுனாமியின் பின்னர் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்பு வேலைத் திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

இதேவேளை, நிதியமைச்சருக்கும் உலகவங்கியின் தலைவர் ஜேம்ஸ்வூட்சனுக்குமிடையே கடந்த செவ்வாய்க்கிழமை விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. எதிர்வரும் மே மாதம் கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு குறித்தும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ற-8)

# க.பொ.த.சாதாரண தர மாணவருக்கு ஜூலையில் முன்மதிப்பீட்டுப் பரீட்சை

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களுக்கும் எதிர்வரும் ஜூலை மாதம் 30ஆம் திகதி கணித பாடத்தில் முன்மதிப்பீட்டுப் பரீட்சை ஒன்றை பரீட்சைத் திணைக்களம் நடத்தவுள்ளதாக உத்விப் பரீட்சை ஆணையாளர் அனுரா எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லின் ஆலோசனைக்கு அமைய இம்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ள சுமார் 3 இலட்சம் மாணவர்களும் கணித பாடத்தின் முன்மதிப்பீட்டுப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சைக்கு முன்னோடியாக கணித பாடத்தில் மாணவர்களின் குறைநிறைகளை முன்கூட்டியே கண்டறியவும் பரீட்சை தொடர்பாக மாணவர்கள் மத்தியில் உள்ள அச்ச உணர்வை இலலாதொழிக்கவுமே இப்பரீட்சைகள் நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பரீட்சைகள் யாவும் அந்தந்த பாடசாலைகளிலேயே நடத்தப்படும். அத்துடன் பரீட்சைத் திணைக்களமே வினாத்தாள்களைத் தயாரித்து வழங்கும். இப் பரீட்சையின் ஊடாக பெறப்படும் பெறுபேறுகளின் அடிப்படையில் கணித பாடத்தில் மாணவர்களுக்குள்ள ஈடுபாடு மற்றும் தெளிவின்மை தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்படும்.

கணிதபாடம் தொடர்பாக பாடசாலைகள் தமது பாடவிதானத்தை பூர்த்தி செய்துள்ளனவா? மாணவர்கள் கணிதபாடம் தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தியுள்ளன்ரா என்பது பற்றி இப்பரீட்சையின் ஊடாக அறிநது கொள்ளமுடியும் எனவும் கல்வி அமைச்சு எதிர்பார்க்கிறது.

ஜூலை மாதம் 30ஆம் திகதி நடைபெறும் கணித பாட பரீட்சையில பெறப்படும் புள்ளிகளுககும் டிசம்பர் மாதம் நடத்தப்படும்கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீசையில பெறப்படும் புள்ளிகளுக்கும் தொடர்புகள் இருக்கமாட்டாது எனவும பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.(க-9)

# எரிக்சொல்ஹெய்ம் எல்லை மீறுகிறார் தேசப்பற்று அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான தகவல் பரிமாற்றுச் செயற்பாடே இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்முக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு. இதனையே அவர் செய்யவேண்டும். வேண்டாத வேலைகளில் அவர் ஈடுபடக் கூடாது என்று தேசப்பற்றுடைய தேசிய அமைப்புத் தெரிவித்துள்ளது.

எரிக்சொல்ஹெய்ம் சமாதான முயற்சி, பொதுக் கடடமைப்புப் போன்ற செயற்பாடுகளின் பேச்சாளராகத் தன்னை இனங்காட்டிக்கொள்கின்றார். இது அவருக்கு வழங்கப்பட்டுள்ள செயற்பாட்டுக்கு அப்பால்பட்ட விடயமாகவே உள்ளது.

தேசப்பற்றுடைய தேசிய அமைப்பின் உறுப்பினர்களான எல்.ஏ.குணவன்சதேரர், தங்க அமிலதேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமிக்குப் பின்னரான பொதுக்கட்டமைப்பு விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் இன்னும் சில வாரங்களில் கைச்சாத்திடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் என நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஆனால் இவ்வாறான ஒரு கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுவது குறித்து இலங்கை அரசின் பொறுப்பு வாயந்த அதிகாரி ஒருவரே தெரிவிக்க முடியும். அதனை வசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெயம தெரிவிக்க முடியாது.


ஆனால் அந்தப் பொறுப்பையும் கடந்து விசேட சமாதானப் பிரதிநிதி முழுசெயற்பாட்டினதும் பேச்சாளராகவும் சுனாமி மீள் கட்டமைப்புத் தொடர்பான நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து பார்ப்பவர் என்ற நிலையில் அவரே ஏற்படுத்திக்கொண்டுள்ளார் எனத் தென்படுகின்றது.

பிரிவினைக்குச் சார்பான நோர்வேயும் வெளிநாட்டுச் சக்திகளும் கூட்டமைப்பு அரசாங்கத்தை வீழ்த்தும் முயறசியல் ஈடுபட்டுள்ளது. இதற்காக குறிப்பிட்ட சக்திகள பொதுக் கடடமைப்பை உபயோகித்துக் கொள்வதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

யாழ்ப்பாணம், வண்ணை, குளங்கரை மருதடி

# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தான (நாச்சிமார்கோவில்) இரதோற்சவ சிறப்பு மலர் - 23 - 04 - 2005





## பிரதம குருவின் ஆசிச்செய்தி



வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் இரதோற்சவம் வெகு சிறப்பாக நடப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.


ஆலயத்தின் அருட்பொலிவை அதிகரிக்கச் செய்யும் மஹோற்சவத்திலே இரதோற்சவம் மிக முக்கியமானதாகும். ஆலயமே அசைந்து வருவது போல அம்பாள் அடியவர்களை நாடி அருள்தர வரும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

ஊர் கூடித் தேரிழுக்கும் உத்தமப் பெருவிழா ஒற்றுமையின் சின்னம். இவ்விழாவையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவதும் சிறந்ததொரு கைங்கரியமாகும்.

இவ்விழாவில் கலந்துகொள்ளும் அடியவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று நாட்டில் அமைதி சுபீட்சம் கிடைக்க வேண்டுமென எல்லாம்வல்ல அம்பிகையின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

*சர்வேஜனாகா சுகிநோபவந்து*

தேவஸ்தான
பிரதம சிவாச்சார்யார், சிவபூஜாநிதி,
சிவாகமகிரியாரத்தினம்,
சிவஸ்ரீ பால பஞ்சாட்சர சிவாச்சார்யார்.



**இன்று காலை 10.00 மணிக்கு அம்பாள் சித்திரத்தேரில் பவனி வருவார்.**





## ஆலய வரலாறு

இலங்கைத்தீவின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலயம் அமைந்திருக்கும் இடத்திற்கு அருகாமையில் இருக்கும் குளங்கரையைச் சூழ மருத மரங்களும், கனி தரும் நாவல் மரங்களும் வயல்களும் சூழ்ந்து அடர்ந்து அழகு தந்த அப்பகுதியில் ஆரம்பத்தில் மருதமரத்தின் கீழ் அப்பகுதி மக்கள் கல்லை வைத்து வழிபட்டனர். காலம் மாற மாற வழிபாட்டு முறைகளும் மாற்றமடைந்தன.

ஆரம்பத்தில் கல்லை வைத்து வழிபட்ட அப்பகுதி வாழ் மக்கள் 1870 ஆம் ஆண்டில் கல் கட்டடம் அமைத்து மாரியம்மன் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள். இவ்வாலயத்தில் 1887ஆம் ஆண்டு முதன் முதலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்த ஆலயத்திற்கு 1967ஆம் ஆண்டில் மஞ்சம் உருவாக்கப்பட்டது. 1971ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சித்திரத்தேர் அமைக்கப்பட்டது.


ஹரிஸ் பிறிண்டர்ஸ்
Computer Graphics Designers
& offset Printers.
610, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

மில்லேனியம்
உல்லாசப் பயணிகள் விடுதி மற்றும்
உணவகம்
76/60, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்,
இலங்கை.
Ph - 021 222 2810 Cell: 077 3031680

ரஜீவன் எலக்ரிக்கல்ஸ்
மின்சார உபகரணங்கள், T. V. அன்ரனாக்கள், பைப் வகைகள்
யாவற்றிற்கும் போட்டோஸ்ரட் பிரதிகள்
செய்து கொடுக்கப்படும்.
1008, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 222 7533

உங்களுக்குத் தேவையான நவநாகரிகத்திற்கேற்ற
*புடைவை வகைகளையும் *சிறுவர்களுக்கான ரெடிமெட் சோட்ஸ்,
சேட்ஸ் வகைகளுக்கும் மற்றும் *சகலவிதமான தையல் வேலைகளுக்கும்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
ஸ்ரீ காமாட்சி வெல்கம் சில்க்ஸ்
978, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
T.P - 4590462

ரமணன்
கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம்
இல-526,528, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 0777-176068


ஞானம் புத்தக நிலையம்
எம்மிடம் பாடசாலைப் புத்தகங்கள்,
உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள் என்பன பெற்றுக்
கொள்ளலாம்.
668, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

மின்சார உபகரணங்கள், S-lon, Duro ANTON,
இவைகளின் நீர்த் தாங்கிகள், பைப் வகைகள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
சிவா எலக்ரிக்கல்ஸ்
இல-635, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

DTS Telecom Net
Scaning, Printing, Fax, Photocopy, CD Writering, CD Rending, IDD Call,
Internet Call, Local Call
963, K.K.S.Road, Thaddathearu, Jaffna.
T.P - 021-222 6846, 021 - 4591968

# பார்த்திப வருட பொதுப்பலன்கள்

## தனுசு



எதிலும் கூர்மையுடனும் எச்செயலையும் தைரியத்துடன் செய்யும் ஆற்றல் படைத்த உங்களுக்கு ராசி பாதிபதி குரு 10இல் சஞ்சரிப்பதும் 26.05.2005இல் அஷ்டமச்சனி தொடங்க உள்ளது. அனுகூலமற்ற அமைப்பாகும். தேவையில்லாத அலைச்சல்கள் ஏற்படும். தொழில் உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரித்து நிம்மதி இல்லாத சூழ்நிலை நீடிக்கும். சர்ப்ப கிரகமான ராகு 4இலும் கேது 10இலும் சஞ்சரிப்பதால் வீண் விரயங்கள் ஏற்படும். ஆண்டின் தொடக்கத்தில் அதாவது முற்பாதியில் சோதனைகள் சிலவற்றை எதிர்கொண்டாலும் உங்கள் ராசியாதிபதி குரு பகவான் 28.09.2005இல் லாபஸ்தானத்திற்குச் சென்றால் உங்களுடைய கஷ்டங்கள் யாவும் தீர்ந்து ஏற்ற மிகு பலன் ஏற்படும். பொருளாதார ரீதியாகக் கூட உங்களுக்கு ஆண்டின் முற்பாதியில் சில சோதனைகள் இருந்தாலும் பிற்பாதியில் நற்பலன் அமையும். அஷ்டமச் சனி நடைபெறுவதால் உடல் ஆரோக்கியத்தில சற்றுக் கவனமுடன் செயல்படுவது, பயணங்களைத் தவிர்ப்பது உத்தமம். பொதுவாக ஆண்டின் பிற்பாதியில் அனுகூலமான பல்னை அடைவீர்கள்.

**உடல் நிலை:** உங்களுக்கு மந்தமான நிலையும் எதிலும் ஈடுபாடு இல்லாதபடி சோர்வாகவும் காணப்படுவீர்கள். சிலருக்கு உடலில் சிறு அறுவைச் சிகிச்சைகூட மேற்கொள்ள நேரிடும். மனவைி மற்றும் பிள்ளைகள் சோர்வாக அமைந்தாலும் 28.09.2005க்குப் பிறகு படிப்படியாக உடல் நலம் தேறி சிறப்பான நிலையினை அடைவதோடு மருத்துவச் செலவுகள் மறைந்துவிடும். குடும்பத்தில் சுபீட்சமான நிலை உருவாகும்.

**குடும்பம் குழநிந்தகள்:** குடும்பத்தில் கணவன் மனைவி இடையே ஏதேனும் ஒரு காரணத்திற்காக பூசல்கள் உருவாகி மன அமைதி குறையும் சூழ்நிலையும் பொருளாதார நிலையில் சாதகமற்ற சூழலும் கடன் சுமைகளும் அதிகமாகும். உற்றார் உறவினர்களின் வருகையால் செலவுகள் கூடினாலும் பிற்பாதியில் சிறப்பாக திருமண சுபகாரியம் நடைபெற உதவுவார்கள். பொருளாதார நிலையில் ஏற்றம் பெறுவீர்கள். புத்திர பாக்கியமும் அமையும். சுபீட்சமானி நிலைகளால் மன மகிழ்ச்சி ஏற்படும்.

**உத்தியோக நிலை:** மேலிடத்திலிருந்து தேவையற்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். யாரோ செய்த தவறுக்கு நீங்கள் பொறுப்பாகப் பதில் சொல்ல நேரிடும். பிற்பாதியில் தவறு உங்கள் மேல் இல்லை என்பதை மற்றவர்களும் மேலதிகாரிகளும் புரிந்துகொண்டு தகுதியான பதவி ஊதிய உயர்வுகளை உங்களுக்கு உருவாக்கித் தருவார்கள். சிலருக்கு பணி நிரந்தர புதிய பதவிகளை ஏற்படுத்தும்.

**தொழில் வியாபாரம்:** செய்யும் தொழில் வியாபார நிலையில் நெருக்கடிகளை ஏற்படுத்தும். எதிலும் எச்சரிக்கையுடன் செயல்பட்டால் பிற்பாதியில் சிறப்பான லாபமும் அபிவிருத்தியையும் அடைய முடியும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் ஆரம்பத்தில் மிகவும் எச்சரிக்கையாக விட்டுக்கொடுத்துப் போனால் பிற்பாதியில் நம்பிக்கை நாணயத்துடன் உயர்வினை அடைவீர்கள். ஏஜென்ஸி கண்டிராக்ட் போன்றவை ஏற்றம் தரும்.

**பெண்களுக்கு:** உடல்நலம் முற்பாதியில் பாதிக்கும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்பட்டு அலைச்சல், மனம் சோர்வடைவீகள். கணவன் மனைவிக்குள் சிறு சிறு புசல்கள் அதிகம் இருக்கும். பிற்பாதியில் இவை அனைத்தும் விலகி குடும்பத்தில் சிறப்பான ஒற்றுமையும் கணவன் மனைவி ஒற்றுமையும் கணவன் மனவைி இடையே இனிமையும் திருமண சுபகாரியம் தடபுடலாக நடைபெறும். குழந்தைப் பாக்கியம் மன மகிழ்ச்சி தரும்.

**பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு:** சோதனையான காலங்களை தற்போது கவனமுடன் கடந்து விட்டீர்கள் என்றால் பிற்பாதியில் உங்களுக்கு புகழ் கூடும். எடுக்கும் எந்த ஒரு செயலிலும் திறமையுடன் செயல்பட்டு வெற்றிகளை இறுதியில் பெற்று அனைவராலும் பாராட்டப்படுவீர்கள்.

**கொடுக்கல் வாங்கல்:** கொடுக்கல் வாங்கலில் கடுமையான சோதனைகள் சில நெருக்கமானவர்கள் ஏமாற்றக்கூடிய சூழ்நிலைகளை எச்சரிக்கையுடன் கடந்து விட்டால் பின்வரும் காலத்தில் வெகு சிறப்பான வெற்றியும் அனுகூலமும் உண்டாகும். கடன்கள் விலகும். வம்பு வழக்கு வெற்றி தரும்.

**விவசாயிகளுக்கு:** உங்களின் பயிர்களில் காற்று மழையினால் பயிர் சேதம் உண்டாகும். தக்க சமயததில் பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொள்ள தாமத நிலை உண்டாகும். பிற்பாதியில் சிற்பபான விளைச்சலையும் அதிகமான பலனையும் பெற்று கடன்களை வட்டியின்றி அடைத்துவிட முடியும். அரசு மூலம் மானிய உதவியையும் பெற்று விடுவீர்கள்.

**மாணவர்களுக்கு:** கல்வியில் ஞாபக மறதியினால் மதிப்பெண் குறையும் சூழ்நிலையால் பெற்றோர் ஆசிரியர்களின் ஆதரவுகள் குறையும். பிற்பாதியில் இந்த சோர்வான நிலை விலகி சிறப்பான முற்னேற்றத்தினை அடைவீர்கள். மற்றவர்களும் பெற்றவர்களும் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள்.

**கலைஞர்களுக்கு:** திறமைகளைப் பயன்படுத்தி உயர்வுக்கு வருவதில் இடையூறுகளை சந்திப்பீர்கள். தொழில் நிலையில் பலத்த போட்டிகள் உருவாகும். பிற்பாதியில் உங்களுக்கு புது வாய்ப்புகள் உருவாகி சிறப்பாக பெயர் புகழ் ஏற்படுத்தும் நிலையால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

### 14.04.2005முதல் 25.05.2005வரை

உங்கள் ராசிக்கு 7இல் சனி சஞ்சரிப்பதும் 4இல் ராகு இருப்பதும் சங்கடமான அமைப்பு என்றாலும் குரு வக்ரமாக சஞ்சரிப்பதால் படிப்படியான முன்னேற்றம் தொழில் உத்தியோக நிலையில் உண்டாகும். போட்டி, பொறாமைகள் மந்தமான நிலை விலகி ஏற்றம் உண்டாகும். பொருள் தேக்கமும் பணமுடக்கமும் குறையும். வேலையாட்களால் ஏற்பட்ட பிரச்சனைகளும் சோதனைகளும் விலகும். உத்தியோகத்தில் அதிகாரிகளின் ஒத்துழைப்பினைப் பெறக்கூடிய சூழ்நிலைகள் உண்டாகும். புதிய வேலைவாய்ப்பு சிறிது தாமதித்து அமையும். குடும்பத்தில் திருமண முயற்சியை மேற்கொள்ள முடியும். பொருளாதார நிலையில் ஓரளவு தனவரவுகள் ஏற்படும். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள் குறைந்து ஒற்றுமை உண்டாகும். அரசியலில் பதவிக்கு இருந்த சில சங்கடங்கள் குறையும். மாணவர்களின் கல்வியில் நல்ல ஏற்றம் ஏற்படும்.

### 26.05.2005முதல் 27.09.2005வரை

இக்காலத்தில் உங்களுக்கு அஷ்டமச்சனி தொடங்கியுள்ளதும் குரு 10இல் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். அதிக சோதனைகளையும் தேவையற்ற வீண் விரயங்களையும் சந்திக்க நேரிடும். உடல் நலம் அதிகம் பாதிக்கும். வெளியுர்ப் பயணங்களில் மிகவும் எச்சரிக்கை தேவை. சில விபத்துக்களில் சிக்கவும் வாய்ப்புள்ளது. குடும்பத்திலும் கணவன் மனைவி இடையே அதிக பு,சல்கள் உண்டாகி மனஅமைதி குறையும். திருமணம் தடைப்படும். தொழில் வியாபார நிலையிலும் அதிக நெருக்கடிகளும் மறைமுக எதிரிகளின் தொல்லைகளும் அதிகரிக்கும். லாபம் மிக மிகக் குறையும். கூட்டுத் தொழிலில் அனுசரித்துப்போக முடியாது. கொடுக்கல் வாங்கலில் வீண் பிரச்சினைகளில் சிக்கிக்கொள்வீர்கள். உத்தியோக நிலையில் அடிக்கடி விடுப்பு எடுத்து மேலதிகாரிக்ளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். மாணவர்களுக்கு தீய நட்பு ஏற்படும்.

### 28.09.2005முதல் 22.11.2005வரை

அஷ்டமச்சனி நடைபெற்றாலும் குரு பகவான் லாபஸ்தானத்தில் இருப்பதால் எல்லா வகையிலும் ஏற்றத்தினை ஏற்படுத்தும் அமைப்பாகும். உங்களின் உடல்நலமும் மனநலமும் சிறப்பாக அமையும். மனவைி மற்றும் குழந்தைகள் சுபீட்சமாகவும் மருத்துவச் செலவின்றி அமைவார்கள். குடும்பத்தில் உற்றார் உறவினர் நண்பர்களின் உதவி முயற்சிகளால் திருமண சுபகாரியம் தடபுடலாக நடைபெறும். குழந்தைப் பாக்கியம் அமையும். வீடு மனை, வண்டி வாகனம், ஆடை, ஆபரணம் அமையும். தொழில் வியாபாரத்தில் சிறப்பான அனுகூலப் பலன் அமையும். புதிய தொழில் அமையும். கூட்டுத்தொழிலில் கூட்டாளிகளிடம் நல்ல ஒற்றுமை உண்டாகும். உத்தியோகத்தில் பதவி ஊதிய உயர்வுகளை அடைகின்ற காலமாக இருக்கும். வம்பு வழக்குகளும் கடன்களும் வசூலாகும். கொடுக்கல் வாங்கலில் அனுகூலமான பலன்களை அடைவீர்கள். மன மகிழ்ச்சி உண்டாகும்.

### 23.11.2005முதல் 05.03.2006வரை

சனி வக்ர கதியில் சஞ்சரிப்பதும் குரு பகவான் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதும் அற்புதமான ஏற்றம் தரும் அமைப்பாகும். இக்காலத்தில் உங்களின் செல்வம் செல்வாக்கு பெயர் புகழ் யாவும் கூடுகின்ற காலமாகும். பொருளாதார நிலையில் தன்னிறைவு அடைவீர்கள். வீட்டைக் கட்டி குடிபுகும் அமைப்பும் திருமண சுபகாரியத்தை தடபுடலாக செய்திடும் அமைப்பும் புரிப்பினை ஏற்படுத்தும். தொழில் வளர்ச்சி அடையும். வியாபாரம் அதிக லாபத்தையும் வெளியு, ரிலும் அபிவிருத்தியாகும். உத்தியோக நிலையில் விரும்பிய இடத்திற்கு மாறுதல் ஏற்பட்டு உயர் பதவியை அடைவீர்கள். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். கணவன் மனைவி உறவு சிறப்பாக அன்னியோன்யமுடன் அமையும். கூட்டுத்தொழில் ஏஜென்ஸி கொடுக்கல் வாங்கலில் சிறப்பான நற்பலன்களை அடைய முடியும். சிறப்பான கல்வியால் மாணவர்கள் வெற்றி பெறுவார்கள்.

### 06.03.2006 முதல்13.04.2006வரை

குரு சனி வக்ர கதியில சஞ்சரிபதால் உங்களுக்கு சுமாரான பலன்களே உண்டாகும். சிறு சிறு பித்தம் வாயு சம்பந்தமான உடல் உபாதைகளை ஏற்படுத்தும். மருத்துவச் செலவுகள் குறையும். கணவன் மனைவி இடையிலு சிறு சிறு வாக்குவாதம் ஏற்பட்டாலும் அதனை விட்டுக்கொடுத்துப் போவது மூலம் அனுகூலப் பலனை அடைய முடியும். பொருளாதார நிலையில் சிறிய இடையு,றுகளை அடைய நேர்ந்தாலும் தன வரவுகள் தாராளமாகவே வரும். கடன்கள் விலகும். வண்டி வாகனம் மூலம் ஏற்பட்ட செலவுகள் குறையும். கூட்டுத்தொழில் வியாபாரம் சற்றே ஏற்றம் தரும். தொழில் வியாபார நிலையில் நிதானமாக செயல்பட்டால் உங்களது லாபம் கூடும். உத்தியோக ரீதியாக உங்கள் முயற்சிகளால் அதிகாரிகளுக்கு உங்கள் திறமைகளைப் புரியவைப்பீகள். ஆரவையும் பெற்றுவிடுவீர்கள். புதிய வேலை தாமதித்து அமையும். அரசியலில் பெயர் புகழ் மெல்ல கூடும். விவசாயம் சுமாராக நடைபெறும்.

## நட்சத்திர பலன்கள்

### மூலம்

ஆரம்பத்தில் உத்தியோக நிலையில் எதிர்பாராத இடமாற்றம் சந்திக்க நேரிடும். குடும்பத்தை விட்டு வெகுதொலைவில் தனியாக வாழுகின்ற நிலைகளையோ அல்லது இங்கும் அங்குமாக அலையவோ நேரிடலாம். சிலருக்கு பதவி ஊதிய உயர்வுகள் தாமதப்படும். புதிய வேலை கிடைக்க தடை உண்டாகும். பிற்பாதியில் பதவி ஊதிய உயர்வுகளுடன் குடும்பத்தோடு சேர்ந்து வாழுகின்ற யோகத்தினை அடைவீர்கள். புதிய நிரந்தரமான வேலை அமையும். வெளிநாட்டுப் பணிக்கு முயற்சி செய்பவர்கள் கண்டிப்பாக அந்தப் பணியினை பெற்றுச் சிறப்பாக உயர்வினை அடைவீர்கள். மாணவர்களின் கல்வியில் ஏற்றமிகு பலன உண்டாகும். கணவன் மனைவி உறவு சிறப்பான அன்னியோன்யத்துடன் அமையும்.

### பு,ராடம்

கொடுக்கல் வாங்கலில் இதுவரை நீடித்து வந்த சிக்கல்கள் 28.09.2005க்குப் பிறகு உங்களைவிட்டு விலகிவிடும். பண விஷயத்தில் அதிக அக்கறையுடன் முற்பாதியில் செயல்பட்டால்தான் பிற்பாதியில் ஏற்ற மிகு பலனை அடையமுடியும். தொழில் விஷயத்தில் மிகவும் கவனமுடன் செயல்பட வேண்டும். பிற்பாதியில் அபிவிருத்தி செய்வது பெரிய முதலீடுகளை ஈடுபடுத்துவது போன்றவற்றில் சிறப்புடன் செயல்பட முடியும். வியாபாரிகளுக்கு முற்பாதி நஷ்டம் ஏற்பட்டாலும் பிற்பாதியில் நஷ்டங்களை ஈடுகட்டிவிடும் அளவிற்கு லாபம் கூடும். உத்தியோக நிலையில் பிற்பாதியில் மட்டுமே சிறப்பான உயர்வினை சந்திக்கும் நிலை மன மகிழ்ச்சி தரும். அரசியல்வாதிகளின் வீண் கெட்ட பெயர் பாதியில் விலகும்.

### உத்திராடம் 1ம் பாதம்

வியாபாரம் ஆரம்பத்தில் மிகவும் மந்தமாக நடைபெற்று லாபம் குறைந்தாலும் பிற்பாதியில் படிப்படியாக ஏற்றம் உண்டாகி பிரமாதமான லாபப் பலனை எதிர்பார்க்க முடியும். எடுக்கும் எந்த ஒரு முயற்சியுமே முற்பாதியில் தடை தாமதத்துடன் முடிவடைந்து பிற்பாதியில் வெற்றிகளை ஏற்படுத்தும். பொருளாதார நெருக்கடிகள் பிற்பாதியில் விலகி ஏற்றமிகு பலனும் வீடு மனை, வண்டி வாகன அமைப்பும் கிட்டும். பெணகளுக்குப் பிற்பாதிக்கு பிறகு நினைத்ததெல்லாம் நிறைவேறும். தடைப்பட்ட திருமணங்கள் யாவும் தடபுடலாக நடைபெறும். தொழில் வியாபாரம் சிறப்பான வெற்றி அபிவிருத்தியை ஏற்படுத்தும். விவசாயிகளுக்கு பிற்பாதியில் சிறப்பான விளைச்சல் அமையும்.

### அதிர்ஷ்ட குறிப்புகள்

அதிர்ஷ்ட திகதிகள்: 2, 5, 9, 11, 24, 27
கிழமை: வியாழன்
நிறம் : மஞ்சள்
தெய்வம்: தட்சணாமூர்த்தி
திசை : வடகிழக்கு கல் : புஷ்பராகம்

**பரிகாரம்:** உங்கள ராசிக்கு 26.05.2005 முடிய சனி 7இலும் அதன் பிறகு அஷ்டமத்திலும் சஞ்சரிக்க உளளதால் சனி விரதம் மேற்கொள்வதும் காக்கைக்கு எள் சாதம் அளிப்பதும் எண்ணெய் தீபம் ஏற்றி ஒருமுறை திருநள்ளாறு நளன் குளத்தில் நீராடி வந்தால கெடுபலன் குறையும. 28.09.2005 முடிய குரு 10இல் உள்ளதால் குரு ப்ரீதி தட்சணாமூர்த்தியை வழிபடுங்கள். ராகு பகவானும் 4ம் வீட்டில் சஞ்சரிக்க உள்ளதால துர்க்கையம்மனை சிவப்பு மலர்கள் கெண்டு பு,ஜிப்பதும் சர்பேஸ்வரரை வழிபடுவதும் நற்பலன் தரும். (தொடரும்)

# ஆசிய -ஆபிரிக்க உச்சி மாநாடு ஜகார்த்தாவில் நேற்று ஆரம்பம்

(ஜகார்த்தா)

ஆசிய - ஆபிரிக்க உச்சி மாநாடு இந்தோனேஷிய தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று ஆரம்பமாகியது.

இந்த மாநாட்டில் ஆசிய -ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த பிரதமர்கள், ஜனாதிபதிகள், மன்னர்கள் என 100 முக்கிய அதிதிகள் கலந்து கொண்டனர்.

ஜகார்த்தாவில் பிரதான மத்திய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ள 100 அதிதிகளுக்கும் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த மாநாட்டை முன்னிட்டு பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தவறிப் போன உலக நாடுகளுடனான உறவுகளைக் கட்டியெழுப்பும் ஒரு அமைபபை உருவாக்குவதே ஆசிய - ஆபிரிக்க மாநாட்டின் நோக்கமென்று தலைமை உரையாற்றிய இந்தோனேஷிய ஜனாதிபதி தெரிவித்தார்.

1955 ஆம் ஆண்டு ஆரம்பமான ஆசிய - ஆபிரிக்க நாடுகளின் அமைப்பின் 50ஆவது ஆண்டின் பூர்த்தியை கொண்டாடும் வகையல் இந்த மாநாடு அமைந்துள்ளது.

எனினும், சர்வதேச ரீதியில் ஆசிய - ஆபிரிக்க நாடுகளை எவ்வாறு முன்னேற்றுவது என்பது குறித்த கேள்வி தற்போதைய சூழலில் எழுந்துள்ளதாக இந்தோனேஷிய ஜனாதிபதி தனதுரையில் குறிப்பிட்டாா. (ற-9)

## பாடசாலை மீது குண்டுத் தாக்குதல்

நேபாளத்தில் அதிக கட்டணம் வசூலிதத ஒரு பாடசாலை மீது மாவோயிஷ்ட தீவிரவாதிகள் வெடிகுண்டு வீசித் தாக்குதல் நடத்திய தில் அப்பள்ளிக் கட்டடமே இடிந்து தரை மட்டமானது.


நேபாளத்தில் அதிகமாகக் கட்டணம் வசூலித்து வரும் பாடசாலைகள் மீது தீவிரவாதிகள் அண்மைக்காலமாக அதிரடித் தாக்குதல நடத்தி வருகின்றனர்.

கடந்த புதன்கிழமை காத்மண்டு அருகில் உள்ள ஒரு பாடசாலையின் மீது இத்தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. பள்ளி விடுமுறையாக இருந்ததால் குழந்தைகள் தப்பினர்.

ஆனால் வெடிகுண்டு வெடித்ததில் 4 பொலிஸ்காரர்கள் உள்ளிட்ட ஐந்து பேர் உயிரிழந்தனர். (ற)

## ஐ. நா செயலாளர் நாயகம்

# 26 இல் இந்தியாவிற்கு விஜயம்



ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகன் கோபி அனான் எதிர்வரும 26ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளர்.

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயமாக இந்தியா செல்லும் கோபி அனான், ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் மற்றும் பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி டெல்லி செல்லும அவர் அடுத்த நாள் ராஜ்காட்டுக்கு சென்று மகாத்மா காந்தி சமாதியில் அஞ்சலி செலுத்தவுள்ளார்.

பின்னர் ஜனாதிபதி அப்துல் கலாம், பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி, வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளார்.

அப்போது ஐ.நா சபையில் சீர்திருத்தம் பற்றி இந்தியத் தலைவர்களுடன் கோபி அனான் விவாதிக்கவுள்ளார். அப்போது இந்தியாவுக்கு ஐ.நா பாதுகாப்புச்சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்தியத் தலைவர்கள் அவரிடம் முன்வைக்கவுள்ளனர்.

கடந்த வாரம் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ முஷாரப்புடன் நடத்திய பேச்சு பற்றி பிரதமர் மன்மோகன்சிங் விளக்குவார். மற்றும் உலக பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றியும் விளக்கமளிக்கப்படவுள்ளது.

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு 28ஆம்திகதி கோபி அனான் நியூயோர்க்குக்குப் புறப்படுவார். இதேவேளை,1997ஆம் ஆண்டு ஏப்ரலிலும் 2002ஆம் ஆண்டு மார்ச்சிலும் கோபி அனான் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## ஈராக்கில் கொடூரம்

# ரைக்கிறிஸ் நதியிலிருந்து எழுபது சடலங்கள் மீட்பு

(பக்தாத்)

ஈராக்கில் ரைகிறிஸ் நதியிலிருந்து 70ற்கும மேற்பட்ட சடலங்கள் கண்டெடுக்கபபட்டுள்ளன. இவற்றில் சிலரது சடலங்கள் மிகவும் கடுமையான வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

மதீன் நகரின் தெற்குப் பகுதியில் உள்ள ரைகிறிஸ் நதியிலிருந்து எழுபதிற்கும் அதிகமான ஆண்கள், பெண்கள் மற்றும் சிறார்களின் சடலங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. சிலரது தலைகள் துண்டிக்கப்பட்டும் வேறு சிலரது குரல்வளைகள் அறுக்கப்பட்டும் காணப்படுகின்றன.

கடந்த சனிக்கிழமை மதீன் நகரிலிருந்து பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்ட 100 பேரில் 12 பேர் விடுவிக்கபபட்ட நிலையில், எஞ்சிய பேரை தீவிரவாதிகள் கொன்று ஆற்றில் வீசியிருக்கலாமென ஈராக் அதிபர் தெரிவித்துள்ளார்.



இதேவேளை பக்தாத்திற்கு வடமேற்கே ஹெடிதார் நகரில் ஒரு உதைபந்தாட்ட மைதானத்தில இருந்து பத்தொன்பது பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஒரு சுவருக்கு முன்பாக வரிசையில் நிறுத்தப்படட நிலையில் இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுளளனர்.

ஹெடிதார் நகருக்குச் சென்று கொண்டிருந்த வழியில் கிளர்ச்சிக்காரர்களால் கடத்தப்பட்ட ஈராக்கிய பாதுகாப்புப் படையினரது சடலங்களே இவையென ஈராக்கிய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. இச்சம்பவங்கள் தொடர்பாக தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ற-5)

# துருக்கியில் சுரங்க விபத்து பதினேழு பேர் உயிரிழப்பு

துருக்கியில் இடம்பெற்ற சுரங்க விபத்தில் 17பேர் உயிரிழந்துள்ளனர்.

நிலக்கரி அகழ்வில் ஈடுபட்டிருந்த போது அங்கு ஏற்பட்ட நச்சுவாயுக் கசிவின் காரணமாக இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

துருக்கியின் அனற்நிலா மாநிலத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றிலிருந்து சுமார் 300 மீற்றர் ஆழத்தில் இடம்பெற்ற இந்த விபத்தின் பின்னர் இருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

உயிரிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை 1992 ஆண்டு கருங்கூலுக்கு அருகில் இடம்பெற்ற சுரங்க விபத்தில் 270 துருக்கியர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# இந்தோனேஷியாவில் ரயில் விபத்து 9 பேர் பலி;9 பேர் ஆபத்தான நிலையில்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியா தலைநகர் ஜகார்த்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ரயில் விபத்து ஒன்றில் 9பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒன்பது பேர் படுகாயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜகார்த்தாவில் ரயில் பாதை ஓரத்தில் உள்ள உணவகத்தில் அமர்ந்திருந்த மக்கள் கூட்டம்மீது வேகமாக வந்த ரயில் மோதியது.

ரயில் பாதையில் அமர்ந்திருந்த அம்மக்களுக்கு உணவகத்தில் ஒலித்துக் கொண்டிருந்த வானொலி ஓசையால், ரயில் வந்த சத்தம் கேட்கவில்லை.

அந்த ரயில் ஜகார்த்தாவிலிருந்து ஜாவா நோக்கிச் சென்று கொண்டிருந்த விரைவு ரயில் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# வட-கிழக்கிலுள்ள கலாசார மையங்களை அபிவிருத்தி செய்ய யுனெஸ்கோ முன்வருகை



வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள பண்டைய கலாசார மையங்களை அபிவிருத்தி செய்வதற்கு யுனெஸ்கோ நிறுவனம் முன்வந்துள்ளது.

தென்னிலங்கையில் கலாசார மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் தென்னிலங்கையில் உள்ள கலாசார மையங்கள் பலவும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

அதாவது, தென்னிலங்கையில் பௌத்த கலாசாரங்களை வெளிப்படுத்துகின்ற புராதன மற்றும் கலாசாரமையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று வடக்கு- கிழக்கிலும் உள்ள இந்து, கிறிஸ்தவ கலாசார மையங்களை அபிவிருத்தி செய்வதற்கு யுனெஸ்கோ நிறுவனம் முன்வந்துள்ளது.

முதலில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், மடுமாதா தேவாலயம ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை அரசாங்கத்துடன் இணைந்து யுனெஸ்கோ விரைவில் நடைமுறைப்படுத்தும் என யுனெஸ்கோ நிறுவனத்தின் பிரதம அதிகாரி ஆர்.பி.பெரேரா தெரிவித்தார். (ற-19)

## நடமாடும் நூலக சேவைக்காக

# யாழ்.பொது நூலகத்திற்கு 32 இலட்சம் பெறுமதியான பஸ்!

## யுனெஸ்கோ நிறுவனம் வழங்கியது

(யாழ்ப்பாணம்)



யுனெஸ்கோ நிறுவனத்தினால் நடமாடும் நூலக சேவைக்காக 32 இலட்சம் ரூபா பெறுமதியான புதிய பஸ் ஒன்று யாழ். பொதுநூலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு நேற்று காலை யாழ்.பொது நூலகத்தில் யாழ்மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெற்றது.



இந் நிக[illegible]யுனெஸ்கோ நிறுவனத்தின் [illegible]ரதம அதிகாரி ஆர்.பி.பெரேரா, யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமானசிங்கம், யாழ் பொதுநூலக பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ். இந்துக் கல்லூரி அதிபர், யாழ்.மத்திய கல்லூரி அதிபர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யுனெஸ்கோ நிறுவனத்தின் பிரதம அதிகாரி ஆர்.பி. பெரேரா இதற்கான பஸ்ஸை யாழ்.மாநகரசபை ஆணையாளரிடம் வைபவ ரீதியாகக் கையளித்தார். (ற-19)

# அதிபர் தரத்தில் உள்ளவர்களை அதிபர் பதவியிலேயே நியமிக்குக!

## வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அதிபர் தரத்தில் உள்ளவர்களை அதிபர் பதவி வெற்றிடமாக உள்ள பாடசாலைகளை இனங்கண்டு அப்பாடசாலைகளுக்கு நியமிக்கும்படி வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்கு -கிழக்கு மாகாண கல்வி அமைசசின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 18,19 ஆம் திகதிகளில் வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் அனைத்து கல்விப் பணிப்பாளர்களுக்கும் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே வடக்கு -கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் தரத்தில் உள்ளவர்கள் சில இடங்களில் உப அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு அதிபர் தரத்தில் உள்ளவர்களை அதிபர் நியமனமின்றி பாடசாலைகளில் வைத்திருக்கவேண்டாம் எனவும் இவர்களை இனங்கண்டு அதிபர் பதவி வெற்றிடமாக உள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கும் படியும் வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாகாணக் கல்வி அமைச்சின் அனுமதியின்றி அதிபர்களையோ, ஆசிரியர்களையோ கோட்டக்கல்வி அலுவலகங்களிற்கும, வலயக்கல்வி அலுவலகங்களிற்கும் இணைகக வேண்டாம் எனவும் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வலயக்கல்விப் பணிபபாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்படடுள்ளது. (ற-19)




# சிறுவர் அரங்கம்


## கிறீன் விச் கோடு

பூமியில் வடக்குத் தெற்காக வரையப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும் கற்பனைக் கோடுகளை நெடுங்கோடுகள் என்பர்; 0° நெடுங்கோடு, கிறீன்விச் கோடு எனப்படும்.

இலண்டனுக்கு அருகில் உள்ள கிறீன்விச் என்ற இடத்தினூடாக இது செல்வதால் இப்பெயரைப் பெற்றது.

S.நித்தியா, கொக்குவில்.

## வெள்ளை முயல்



துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா - அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா


பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா - நான்
கொஞ்சிப் பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா

பளிங்குக் கண்ணைக் கூர்ந்து நானும்
பார்க்க ஆசை அம்மா - அது
ஒளிந்து கொள்ளப் புதரை நோக்கி
ஓடப் பார்க்குதம்மா

புல்லைத் தினமும் பிடுங்கிப் பிடுங்கிப்
போடுவேனே அம்மா - அது
மெல்ல மெல்லக் கடித்துக் கடித்து
உள்ளே தள்ளும் அம்மா.

குழந்தைக் கவிஞர்,
அழ. வள்ளியப்பா.

## ஒரு ஆசை



நெடு நாட்களுக்கு முன் முனிவர் ஒருவர் காட்டில் ஒரு அரக்கனிடம் சிக்கிய தேவதையைக் காப்பாற்றினார். அந்த நன்றிக்காக அந்தத் தேவதை ஒரு மந்திரக்கனியை முனிவருக்குக் கொடுத்தாள்.

"இந்த மந்திரக்கனியைப் பெற்றுக்கொள்ளுங்கள். இதைக் கையில் வைத்துக்கொண்டு நீங்கள் எதை விரும்பினாலும், உங்களுக்கு அது கிடைக்கும்'' என்று கூறி மறைந்தாள்.

முனிவருக்கு உலகில் எப்பொருளின் மீதும் ஆசையில்லை. இதைப் பொதுமக்களின் நன்மைக்குப் பயன்படுத்தலாம் எனக் கருதி, அந்த நாட்டு மன்னனிடம் சென்றார். முனிவரைக் கண்ட மன்னன் மகிழ்ச்சியடைந்து அவரை வரவேற்று அவர் வந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டான்.

"மன்னா, இது ஒரு மந்திரக் கனி. இதற்குரிய விலையைக் கொடுத்து யார் இதை வாங்குகிறார்களோ, அவர்களுடைய விருப்பங்களில் ஒன்று நிறைவேறும். அவ்வாறு நிறைவேறிய பின், அதை மற்றொருவருக்குத் தான் வாங்கிய விலையை விடக் குறைந்த விலையில் விற்று விடவேண்டும். தன்னுடைய விருப்பம் நிறைவேறியபின், இந்தக் கனியை வாங்கியவர் ஒரு வாரத்திற்கு மேல் தன்னிடம் வைத்திருக்கக் கூடாது. அப்படி வைத்துக்கொண்டால், அவருக்குப் பெருத்த அபாயம் ஏற்படும். முதலில் உங்களுக்கு இந்தப் பழத்தைக் கொடுக்கிறேன். தங்களது நீண்ட நாளைய நிறைவேறாத ஒரு விருப்பத்தை இதன்மூலம் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்'' என்று கூறி முனிவர் பழத்தினை மன்னனுக்குச் சமர்ப்பித்தார்.

மன்னனுக்குத் தன் நெடுநாள் விருப்பம் திடீரென ஞாபகம் வந்தது. இந்தக் கனியின் மூலம் பக்கத்து நாட்டு மன்னனைப் போரில் வென்றுவிடலாம் என்ற எண்ணத்துடன், ஆயிரம் பொற்காசுகள் கொடுத்து அதை வாங்கிக் கொண்டான்.

மன்னனிடமிருந்து கிடைத்த பொற்காசுகளை ஏழை எளியவர்களுக்குத் தானம் வழங்கிவிட்டு, முனிவர் மீண்டும் காட்டுக்குச் சென்று தவம் புரிந்தார்.

அந்த மந்திரக்கனியின் உதவியால், மன்னனது விருப்பம் நிறைவு பெற்றது. மீண்டும் போர் தொடங்கியபோது, இம்முறை போரில் மன்னன் வென்றான். பக்கத்து நாட்டு மன்னனின் நாட்டைத் தன் ஆதிக்கத்தின் கீழ் கொணர்ந்தான்.

வெற்றியடைந்த பிறகு, அவையில் எல்லா குடிமக்கள் முன்பும், அந்த மந்திரக்கனியின் மகிமையை எடுத்துரைத்த மன்னன், அதை வாங்க விரும்பியவர்களை அழைத்தான். நீண்ட நாட்களாக உடல்நலக்குறைவாயிருந்த மந்திரி அதை ஐநூறு பொற்காசுகள் கொடுத்து வாங்கிக்கொண்டான்.

இப்படியாக அந்தக் கனி பல கைகள் மாறிக்கொண்டேயிருந்தது. கனியின் பெருமை வளர வளர, கைகள் மாற மாற, அதை விற்கும் விலையும் குறைந்துகொண்டே வந்தது.

ஆண்டுகள் சில சென்றன. கண்ணா என்பவன் நோய்வாய்ப்பட்டிருந்தான். மந்திரக்கனியைப் பற்றி கேள்விப்பட்ட அவன், அதை வாங்க நினைத்தான்.

இப்போது அதன் விலை இரண்டு காசுகள் மட்டுமே இருந்தது. அவனுடைய மனைவி மச்சா அதை இரண்டு காசுகள் கொடுத்து வாங்கி, தன் கணவன் குணமாக வேண்டிக் கொண்டாள். அதன்படியே கண்ணாவும் விரைவில் குணமடைந்தான்.

இப்போது மச்சா பெரும் சங்கடத்திற்கு உள்ளானாள். இதை ஒரு காசுக்கு யாரிடமாவது விற்றால், வாங்குபவன் அதை விடக் குறைந்த விலைக்கு எப்படி விற்கமுடியும்? ஆகவே வரும் ஆபத்தைத் தானே அனுபவிக்கலாம்' என்று எண்ணி கனியைத் தன்னிடமே வைத்துக்கொண்டாள். வரப்போகும் ஆபத்தை நினைத்து நினைத்து, அவள் உடல்நலம் குன்றியது.

இதைத் தம் ஞானதிருஷ்டியில் உணர்ந்த முனிவர், மறுநாள் அவள் வீட்டிற்கு வந்து அந்தக் கனியைப் பெற்றுக்கொண்டார். மச்சாவிற்கு பெரும் நிம்மதி கிடைத்தது.

முனிவர் தன் மனதிற்குள் சிரித்துக்கொண்டார். தான் மட்டும் இப்படிச் சொல்லவில்லை என்றால் மன்னனே இந்தக் கனியை வைத்துக்கொண்டு தான் நினைத்ததை எல்லாம் அனுபவித்துக்கொண்டிருப்பான். அதனால் மக்களுக்கு எந்தப் பயனும் இருக்காது.

எனவே, தான் இப்படி ஒரு நிபந்தனை விதித்தார். இதனால் பயனடைந்தோர் அநேகர்.

இனி, அந்த மந்திரக்கனியுடன் அடுத்த நாட்டை நோக்கிப் புறப்பட்டார் முனிவர்.


## உங்களுக்குத் தெரியுமா?

- பென்சிலை முதன் முதலில் தயாரித்தவர்கள் என்.ஜே.கண்டே, கிராபைட். 1795இல் களிமண்ணால் பூசப்பட்டு பென்சில் பயன்படுத்தப்பட்டது.
- பேனாவை முதன் முதலில் உருவாக்கியவர்கள் எகிப்தியர்கள்.
- முதன் முதலில் நியூஸ் பேப்பரைத் தயாரித்தவர்கள் சீனர்கள்.
- 1974இல் விஞ்ஞானி கார்ல் ஷீல் முதன் முதலில் சுத்தமான குளோரினைத் தயாரித்தார். முதல் உலகப் போரில் உபயோகப்படுத்தப்பட்ட வாயு குளோரின் தான்.
- போக்குவரத்துக்கென காவலர்களே இல்லாத நாடு நியூசிலாந்து.
- மனிதனின் தலைமுடி வருடத்திற்கு 6அங்குலம் வளருகிறது.

S.தர்சன்,
நாவலர் வீதி.

## கண்டுபிடியுங்கள்

கீழே உள்ள படங்களில் ஒரேமாதிரியான முடிகளைச் சூடியுள்ள இரு அரசிகளைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



## விடுகதைகள்

1. தலைக்கு மேல் தனம் கொண்டவன் உரசினால் முடிந்துபோவான். அவன் யார்?
2. புள்ளிகளைக் கொண்டவன் அழகாய் வளர்ந்து நிற்பான். அவன் யார்?
3. இவள் வாய் திறந்தால் அழகு, அவள் ஆடினால் அழகு. அவர்கள் யார்?
4. வாங்குபவன் விரும்பமாட்டான். உருவாக்குபவன் பயன்படுத்தமாட்டான். பயன்படுத்துபவன் பார்க்கமாட்டான். அது என்ன?
5. மறக்கமுடியாதது மறந்தாலும் முடியாதது. அது என்ன?
6. இருக்கும் வரை இறங்கி வரும் இறங்கும் வரை எழுதவரும். அது என்ன?
7. கணுக்கணுவாய் இருந்தாலும் அணுஅணுவாய் இனிப்பான். அவன் யார்?
8. வளைந்து நெளிந்தாலும் வகையாக ஊர் போக உதவுவான். அவன் யார்?
9. உயரப் பறந்தவனுக்கு ஒரு முழ வால். அவன் யார்?

முயற்சியும் தன்னம்பிக்கையும் நிறைந்தவர்களுக்கு நேரம் இரு கைகளையும் தூக்குகிறது.
-மண்ட்

### விடைகள்

பொது அறிவு
அனைத்துக் கேள்விகளுக்கும் ஒரே விடை– நேபாளம்

விடுகதைகள்
1.தீக்குச்சி 2.கோலம்
3.குயில், மயில் 4.சவப்பெட்டி
5.நினைவுகள் 6.பேனா மை
7.கரும்பு 8.சாலை 9.பட்டம்.

## பொது அறிவு

1. உலகில் இருக்கும் ஒரேயொரு இந்து நாடு எது?
2. புத்தர் அவதரித்த லும்பினி தோட்டம் எங்கே இருக்கிறது?
3. உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் சிகரம் அமைந்துள்ள இமயமலை எங்கேயுள்ளது?
4. இராமபிரான் பிறந்த அயோத்தி எங்கே இருக்கிறது?
5. சீதை பிறந்த ஜனகாபுரி எங்கே இருக்கிறது?
6. இமயமலை தேசம் என்று அழைக்கப்படும் நாடு எது?
7. ஆண்களே இல்லாத நாடு என்று கேலியாகக் கூறப்படும் நாடு எது?
8. 108 திருப்பதிகளில் மிக முக்கியமான முக்திநாத் திருத்தலமும் சைவர்கள் புனிதமாக மதிக்கும் பசுபதிநாத் ஆலயமும் அமைந்திருப்பது எந்த நாட்டில்?
9. பெண்குழந்தை ஒன்றைத் தத்தெடுத்து அதை நடமாடும் தெய்வமாகக் கொண்டாடும் தேசம் எது?
10. உருத்திராட்ச மரங்கள் நிறைந்த ஒரே நாடு எது?
11. வைணவர்கள் புனிதமாகக் கருதும் சாளக்கிராமம் எந்தத் தேசத்தில் மட்டும் கிடைக்கிறது?

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து - குறள்

வலம்புரி

# காலம் தாழ்த்தி தட்டிக் கழித்தல்

"சாப்பீட்டீர்களா! சாப்பிட்டீர்களா!" என வார்த்தைகளால் கேட்பதால் மாத்திரம் பசி தீர்ந்துவிடாது. உணவைக் கொடுத்து சாப்பிட வைப்பதன் மூலமே உண்மையில் பசியினைப் போக்க முடியும். இதுதான் பசியைப் போக்க எடுக்கக் கூடிய உரிய நடவடிக்கை.

இதேபோன்றுதான் இலங்கையின் அரச உயர் பீடமும் பொதுக் கட்டமைப்பு! பொதுக்கட்டமைப்பு! என்று சப்புக்கொட்டி ஆகா, ஓகோ என வாய்ப் பந்தல் போடுகிறது. சர்வதேச சமூகத்தின் முன்னால் உடன் உருவாக்கிவிடப்போவது போல் உறுதிமொழியை அள்ளி வீசிப் பீற்றிக்கொள்கிறது.

ஆனால், உண்மையில் உள்மனதில் அதனை உருவாக்கவேண்டும், ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணமே இல்லை என்பதுதான் கசப்பான உண்மை நிலையாகும்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு கால் ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், இன்னமும் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றுதான் கூறப்படுகிறதே தவிர அதனை ஏற்படுத்துவதில் தாமதம் தொடரும் என்பதுதான் நிதர்சனமான உண்மை.

இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் நிகழ்ச்சி நிரலே பொதுக்கட்டமைப்பு உருவாக்கலை பூர்த்தி செய்வதுதான். ஆனால், பொதுக்கட்டமைப்புக்கான அதிகாரமட்ட பூர்வாங்க வேலைகள் மாத்திரம் நிறைவு பெற்றுள்ளதே தவிர, அது இன்னமும் முழுமை பெறவில்லை. இதனை அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஜயந்த தனபாலவும் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

ஆக, மொத்தத்தில் பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் உயர்ந்தபட்ச நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், அரசின் கபட நோக்கம் அதனைப் பின்நோக்கி நகர்த்திக் கொண்டேதான் இருக்கிறது.

எப்படியாவது அரசையும் அரசியலையும் தக்க வைக்கவும், சர்வதேச சமூகத்திற்கு போக்குக் காட்டவும் பொதுக்கட்டமைப்பு உருவாக்குவது என்ற நாடகம் எதுவுமே புரியாத சூனிய வெளியில் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கும்.

இது காலம் தாழ்த்தும் யுக்தியும் அரசைக் காப்பாற்றும் தந்திரமுமே தவிர, பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் திட்டமல்ல. இதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கு தண்ணி காட்டி சந்திப்பைத் தவிர்த்துக் கொண்டமை புலப்படுத்தி நிற்கிறது.

அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகமுமே பொதுக் கட்டமைப்பு உருவாக்கலுக்கு உறுதியான ஆதரவு வழங்கி நல்ல சமிக்ஞை வெளிப்படுத்தியிருப்பது அரசிற்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

இந் நிலையில் அரசாங்கம் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சர்வதேசத்தின் பார்வையை திசை திருப்பவே முயன்று வருகிறது. அதற்கு ஒரு வழியாக, உபாயமாக காலம் கடத்தலை ஏற்படுத்தி வருகிறது. கால ஓட்டத்தில் பொதுக் கட்டமைப்பை தட்டிக்கழிப்பதே அரசின் உள்மன சதித்திட்டமாகும்.

ஓட்டுமொத்தத்தில் எல்லோரது பார்வையிலும் பொதுக் கட்டமைப்புக்கான திரையை விழுத்திவிட்டு, அதனை ஏற்படுத்தாமல் இழுத்தடிப்பதே அரசின் உள்மன நிலைப்பாடாக உள்ளதென்பதே யதார்த்தபூர்வமான தெரிநிலையாகும்.

இதனை நிகழ்த்துவதற்கான முன்னேற்பாட்டு ஒத்திகையாகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டில் சென்று பதுங்கியிருப்பதும், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை சந்திக்காமல் தவிர்த்ததுமாகும். எத்தனை காலம் இது நீடிக்கும்! நீடிக்க முடியும். என்பதை காலம் சொல்லும் என நம்புவோமாக.

# யுத்தமென்ற பேச்சுக்கே இடமில்லை சமாதானமே எமது ஒரே குறிக்கோள்

## –பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

சமாதானம்தொடர்பில் அரசாங்கம் பொறுப்புடனும் பொறுமையுடனும் செயற்பட்டு வருகின்றது என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை கொழும்புத்துறைமுகத்தில் இடம்பெற்ற அமெரிக்க கடற்படையினரால் வழங்கப்பட்ட "கரையஸ்' யுத்தக்கப்பலுக்கு புதிய நாமம் சூட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தா.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், சமாதானத்தை விரும்பிச் செயற்படும் எம்மை ஆதரிக்க சர்வதேச நாடுகள் முன்வரவில்லை. குறிப்பாக இலங்கைக்குள்ளேயே எதிர்க்கட்சியும் எமது பங்காளிக்கட்சியான ஜே.வி.பியும் ஆதரவாக குரல் தருவதாகவும் இல்லை.

அரசாங்கம் எக்காரணத்தைக்கொண்டும் யுததத்தினை ஆரம்பிக்க மாட்டாது. எனினும் யுத்தம் ஒன்றினை தமிழீழ விடுதலைப்புலிகள் ஆரம்பிப்பார்களாயின் அதனை எதிர் கொள்ள நாங்கள் தயாராகவே உள்ளோம். எந்தவொரு கட்டத்திலும் யுத்தம் ஒன்றினை ஆரம்பிக்க அரசாங்கத்திற்கு எண்ணமில்லை. சமாதானம் என்பதே அரசின் ஒரே குறிக்கோளும், இலக்குமாகும். இதனை தமிழீழவிடுதலைப்புலிகள் உணர்ந்து கொள்ளவேண்டும். எனவேவிடுதலைப்புலிகள் அரசின் நன்நடத்தையை புரிந்துகொண்டு செயற்பட்டால் எமக்கும் விடுதலைப புலிகளுக்கும் சாதகமாக இருக்கும் என தெரிவித்தார். (ரு-4,9)

# பொதுக்கட்டமைப்பு உருவாவதை ஜே.வி.பி.தொடர்ந்தும் தடுக்கும்

## –விஜித ஹேரத்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் எக்காரணம் கொண்டும் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படமாட்டாது என கலாசார அமைச்சரும் ஜே. வி.பியின மத்திய குழு உறுப்பினருமான விஜிதஹேரத் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்பேதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், அரசாங்கத்தின் அமைச்சரவையில் இருந்து ஜே.வி.பி. விலக விருப்பதக வெளியான செய்திகள் முற்றிலும் உண்மைக்குப்புறம்பானவை. பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட மாட்டாது. எனவே ஜே.வி.பி. பதவி விலக வேண்டிய நிலை உருவாகாது. ஜே.வி.பி. அரசாங்கத்தில் இருந்து ஒரு போதும் விலகாது. அதேநேரம் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப் படுவதை தடுக்கும் முயற்சியில் அது தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டே இருக்கும் எனவும் தெரிவித்தார். (ரு-4)

# யாழ்.மாநகரசபை வளர்ப்பு நாய்களுக்கு இரண்டாம் கட்ட விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக் குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இரண்டாவது கட்டமாக விலங்கு விசர்நோய்த் தடுப்பு ஊசி வழங்கப்படவுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு மாநகரசபை கேட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களும் நேரமும் வருமாறு,

கொழும்புத்துறை பகுதியில் 26ஆம் திகதி காலை 8.00மணி தொடக்கம் 10.00மணிவரை, ஆனந்தன் வடலி.சென்சூமரீஸ் தேவாலயம் அருகிலும், 10.30மணி தொடக்கம் 12.30 மணிவரை சுவாமியார் வீதி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 2மணி தொடக்கம் 4 மணிவரை பாஷையூர் சிறுவர் பூங்காவிலும் இடம்பெறும்.

27ஆம் திகதி 8மணி தொடக்கம் 10 மணி வரை ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும், 10.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்திலும், 2 மணி தொடக்கம் 4.00ணி வரை கலைச்சுடர் சனசமூக நிலையத்திலும், இடம்பெறும்.

28ஆம் திகதி காலை 8மணி தொடக்கம் 10.00மணிவரை கொழும்புத்துறை வீதி சந்தன் மாதா கோவிலடியிலும், 10.30 மணி தொடக்கம் 12.30மணிவரை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையிலும், 2 மணி தொடக்கம் 4.00 மணிவரை நாவலர் கலாசார மண்டபத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

மேலும் வண்ணார்பண்ணைப் பகுதியில் மேமாதம் 03ஆம் திகதி காலை 8.00மணி தொடக்கம் 10 மணிவரை வள்ளுவர் சனசமூக நிலையத்திலும் 10.30மணி தொடக்கம் 12.30 மணிவரை காமாட்சி சனசமூக நிலையத்திலும் 2.00மணி தொடக்கம் 4.மணி வரை நீராவியடி சைவபரிபாலன சபைமண்டபத்திலும் இடம்பெறும்.

04ஆம் திகதி பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கை ஞானக் குழந்தை பாலர்பாடசாலை அருகிலும் 10.30 தொடக்கம் 12.30 மணிவரை கில்னர்லேன் பாலர் பாடசாலையிலும் 2 மணி முதல் 4.மணிவரை ஆத்திசூடி சனசமூக நிலையத்திலும் இடம்பெறும்.

05ஆம் திகதி காலை 8.00 மணி முதல் 10.மணிவரை ஆறுகால் மடம் அறிவொளி சனசமூக நிலையத்திலும் 10.30மணி முதல் 12.30மணிவரை அண்ணா சனசமூக நிலையத்திலும் 2.00 மணி முதல் 4 மணிவரை சீனிவாசகம் வீதி, கொட்டடி சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

மேமாதம் 10ஆம் திகதி காலை 8.00 மணி முதல் 10மணிவரை சென். நீக்கலஸ் சனசமூக நிலையத்திலும் 10.30மணி முதல் 12.30மணிவரை ஒஸ்மானியாகல்லூரியிலும் 2.00 மணி முதல் 4.மணிவரை நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி ஏற்றபபடுமென யாழ்.மாநாகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்துள்ளார். (க-7)

# அரசாங்கத்தின் போக்கை கண்டித்து மன்னாரில் நேற்று முன்தினம் பேரணி

(மன்னார்)

இலங்கை அரசின் போக்கை கண்டித்து நேற்று முன்தினம் மன்னாரிலும் கண்டனப்பேரணி நடைபெற்றது.

மன்னார் மாவட்ட தொழிற்சங்க இணையம், மீனவர் சங்கம் ஆகியன இணைந்து நடத்திய இப்பேரணி நேற்று முன்தினம் மு.ப 10மணிக்கு மன்னார் பொது அரங்கு முன்பாக ஆரம்பமாகி மாவட்ட மருத்துவமனை சாலை முன்பாக நகர்ந்து மாவட்ட அரச செயலகத்தை சென்றடைந்து நிறைவுற்றது.

அங்கே மனுக்கள் வாசிக்கப்பட்டபின் ஜனாதிபதிக்கான மனுவை மன்னார் மீனவ சங்கத் தலைவர் பி.எஸ். எம்பெட் மனனார் மாவட்ட உதவி அரச அதிபர் திருமதி எஸ் மோகணநாதனிடம கையளித்தார்.

அத்துடன் மனுக்களின் பிரதிகள் மன்னார் மாவட்ட அரச அதிபர், மாவட்ட கண்காணிப்புக்குழுத் தலைவர், மன்னார் யூ.என.எச்.சீ.ஆர். தலைவர்,மன்னார் ஆயர், தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான செயகப் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (க)

# 15 ஆவது தேசிய பாசறை நிகழ்வில் மெமோரியல் நவோதயா முன்னணி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிச்சங்கமும் படையணிகளும் இணைந்து நடாத்திய 15ஆவது தேசிய பாசறை நிகழ்வில் யா/மானிப்பாய் மெமோரியல் நவோதயா ஆங்கிலப்பாடசாலை 135 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்திற்கான கேடயத்தைப் பெற்றுக்கொண்டது. இப்போட்டியில் யா/கொக்குவில் இந்துக்கல்லூரி 132 புள்ளிகளை பெற்று 2ஆம் இடத்தைப்பெற்றுக்கொண்டது, 124 புள்ளிகளைப் பெற்ற நாவற்குழி மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும்,112 புள்ளிகளைப் பெற்ற யா/ பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி 4ஆம் இடத்தையும், 96 புள்ளிகளைப் பெற்ற யா/ தும்பளை சைவப் பிரகாச வித்தியாலயம் 5ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இப்பபாசறை நிகழ்வில் சிகரம் அமைத்தல், பாலம் அமைத்தல் ,சதுரங்கம் ,கரம்,ஒழுக்கம் பேணல், ஊது சமிக்ஞை, கிரகித்தல, அவதானம், உதைபந்து, அணிநடை,தீப்பாசறை, போன்றவற்றில் புள்ளிகள் இடப்பட்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.இப்பாசறையில் 51 பாடசாலைகளைச் சேர்ந்த 580க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கெண்டனர். (க-252)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நம்மில் பலருக்கும் கடந்த காலத்தில் பெரும் பிரச்சினைகள், இன்னல்கள் பல வந்திருக்கும். ஆனால் ஏதோ ஒரு சக்தி இவற்றில் இருந்து நம்மைக்காப்பாற்றி வருகிறது.

அதுபோல் நம் தகுதியைக்காட்டிலும் அதிக அளவில் பல நன்மைகள், நல்லோர் உறவு, மரியாதைகள், இறையருள் என்று பலவும் நம்மை வந்தடையும் அதே சக்திதான் காரணம்.

சுவாமி விவேகானந்தர்



தமிழீழ விடுதலைப்புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட ஓயாதஅலைகள்-3 நடவடிக்கை மூலம் தாக்கியழிக்கப்பட்ட இராணுவத்தின் பலம் வாய்ந்த ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியின் 5ம் ஆண்டு நிறைவு நாளும் ஆனையிறவு படைத்தளத்தினை கைப்பற்றுவதற்காக இராணுவம் மேற்கொண்ட தீச்சுவாலை இராணுவநடவடிக்கை தமிழீழவிடுதலைப்புலிகளினால் முறியடிக்கப்பட்டதன் வெற்றிவிழாவும் தமிழர் தாயகத்தில் நேற்று எழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது. இவ் வெற்றி விழா நாளையொட்டி பளைப்பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் படை அணிகளுக்கிடையிலான விளையாட்டு மற்றும் கலை இலக்கியப் போட்டிகள் நேற்று முதல் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முதல் எதிர் வரும் 28ம் திகதி வர்ரை இடம்பெறவுள்ள இப் போட்டிகளின் தொடக்கநாளான நேற்று பளை புதுக்காட்டுச்சந்தியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் படையணிகளுக்கிடையிலான 10 கிலோமீற்றர் கனரக ஆயுதம் தாங்கிய மரதன் ஓட்ட நிகழ்வு இடம்பெற்றது.புதுக்காட்டுச் சந்தியில் ஆரம்பித்த இவ் மரதன் ஓட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னரணான முகமாலையை சென்று நிறைவடைந்தது. சோதியா படையணியின் சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா இவ் ஓட்ட நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வில் வ... போர்முனைக்கட்டளைத்தளபதி கேணல் தீபன், கேணல் ஜெயம், மாலதிபடையணி சிறப்புத்தளபதி கேணல் யாழினி உட்பட களமுனைத்தளபதிகள் பொறுப்பாளர்கள் போராளிகள் ... கலந்து கொண்டனர் (ச)

# சு.கவுக்கும்– ஜே.வி.பிக்கும் இடையே முரண்பாடுகள் எதுவும் கிடையாது

## எதிர்க்கட்சி கயிறு திரிக்கிறது என்கிறார் மைத்திரிபால

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே முரண் பாடுகள் எதுவும்கிடையாது என சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனா தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் தேசியவிளையாட்டு அரங்கு அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே முரண் பாடுகள், கருத்துவேறுபாடுகள் காணப்படுவதாக எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சியும் அதனை ஆத ரிக்கும் ஊடகங்களும் பிரசாரம் செய்துவருகிறது.

இதில் எந்தவித உண்மையும் கிடையாது. எமக்கிடையே பிளவுகளை உருவாக்கிக்கொள்ளவே இவ்வாறான பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான முரண்பாடுகள் எதுவும் எமக்கிடையே கிடையாது. கூட்டமைப்பு அரசாங்கம் மக்களின் நலனுக்காக ஆட்சி அதிகாரத்தைப் பிடித்து அதன்நோக்குடனேயே செயற்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

---

# அயர்லாந்து...

முகாமைத்துவம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் செய்திருந்த ஏற்பாடுகள் எம்மைப் பிரமிக்க வைத்திருந்தன.

பாதிக்கப்பட்ட ஏனைய இடங்களுக்கும் இதனை ஒரு உதாரணமாக கொள்ள முடியும். தான் விஜயம் செய்த வடபகுதி கரையோரங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு நிவாரண மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகள் மிகவும் காத்திரமாக இருப்பதை விசேடமாகக் குறிப்பிட்டு அயர்லாந்து வெளியுறவு அமைச்சுக்கு அறிக்கை ஒன்றை வழங்கவிருப்பதாக தெரிவித்தார். "மேலும் ஒருமைல் தூரத்தைக் கடப்பதில் எமக்கு நல்ல அனுபவம்உண்டு. உங்கள் நிலைமை வேறுபட்ட ஒன்றல்ல" என அவர்மேலும் தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன் குரோத எண்ணங் கொண்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளுடன் திருப்திப்படாமல் அனர்த்தப் பகுதிகளை நேரில்பார்வையிடுவதற்கு தமது பிரதிநிதியை அனுப்பிவைத்த அயர்லாந்து அரசாங்கத்திற்கு எமது நன்றிகள்,

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இவ்வாறு தமது பிரதிநிதிகளை நேரில்அனுப்பி உண்மைகளை நேரில் கண்டறிய முயற்சி செய்தால் சமாதான நடவடிக்கைகளை குழப்புவதில் ஆர்வமுள்ளவர்களால் அனுப்பப்படக்கூடிய அபகீர்த்தி ஏற்படுத்தும் அறிக்கைகளை நம்பவேண்டியிருக்காது எனத் தெரிவித்தார். அண்மைக்காலங்களில் கொழும்பிலிருந்து கிடைக்கும் அறிக்கைகள் இன்றைய நெருக்கடி நிலைமைகளின் மத்தியிலும் கூட மனமாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாககாட்டவில்லை.

இதனால் தமிழ்மக்கள் ஏமாற்றத்தின் விளிம்பிற்கே சென்றிருக்கிறார்கள். இது கசப்பான வரலாற்று அனுபவம் எனத் தெரிவித்தார்.(இ-04)

---

# இனப் பிரச்சினைக்கு....

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு பலமாதங்கள் கடந்துள்ள போதிலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஐக்கியமக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கம் எவ்வித உதவிகளையும் மேற்கொள்ளவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரித்தானியாவின் தேர்தல் நடவடிக்கைகள் குறித்த கவனம் செலுத்தி காலத்தைகழித்துவருகிறார். பிரதமர் மகிந்தராஜபக்ஷ வெளிநாடுப்பயணத்தை வெகுஉல்லாசமாக கழித்துவருகிறார்.

ஆனால் சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களை கவனிக்க இங்கு எவரும் இல்லை எனரணில் குற்றம் சாட்டினார். அரசின் எவ்வித உதவியும் இல்லாமல் வடக்கு கிழக்கு மக்கள் இன்னல்பட்ட வேளையில் விடுதலைப்புலிகள் அம்மக்களுக்கு பாரியஉதவிகளைச் செய்தனர்.ஆனால் அரசாங்கமோ பாரிய உதவிகளைப் பெற்றுக்கொண்ட போதும் கொழும்பில் இருந்த சிறிதளவு மக்களுக்கு கூட உதவிகளையும் நிவாரண நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளைப்புனரமைக்க சர்வதேசத்திடம் இருந்து ஒரு சதம் கூடக்கிடைக்க வில்லை என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அது முற்றிலும் உண்மைக்கு புறம்பான செய்தியாகும்.

அரசும் விடுதலைப்புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றினை உடனடியாக உருவாக்க வேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். பொதுக்கட்டமைப்பொன்றினை உருவாக்கினால் அதன் மூலமாக பாதிக்கப்பட்ட மக்கள் நன்மையடைவார்கள்.

எனவே அரசாங்கம் பொக்கட்டமைப்பை உருவாக்குவதில் காலத்தை இழுத்தடிப்பதில் எவ்வித பயனும் இல்லை. விடுதலைப் புலிகள் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு நாங்கள் தாயார் எனவும் நோர்வேயின் சமாதான தூதுவர் பொதுக்கட்டமைப்பு 99சதவீதம் பூர்த்தியடைந் திருப்பதர்கவும் தெரித்துள்ளார்.

எனவே அரசாங்கம்தான் உரிய கவனம் செலுத்தி பொதுக்கட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் சமாதானத்திற்கு அடியெடுத்து வைக்கவேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம் என ரணில் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ஆர்ப்பாட்டம்

புத்தளம் நுரைச்சோலை நகரில் அனல்மின்சார நிலையம் அமைக்கப்படுவதை ஆட்சேபித்து நேற்று ஜும்மா தொழுகைக்குப்பின்னர் நுரைச்சோலையில் ஆர்ப்பாட்டம் ஒன்றுஇடம்பெற்றுள்ளது.(இ.4)

---

# புத்தளத்தில்...

தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான வானில் பிரயாணம் செய்த 11 பேரில் சிலர் சிறுகாயங்களுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளைவான் விபத்துக்குள் ளானதை அடுத்துசம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் குறிப்பிட்ட வானில் இருந்து பொருட்களை பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-15)

---

# பொதுக்கட்ட...

தேவனிடம் கையளித்துள்ளார்.

இந்த ஆவணம் தற்சமயம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந் நிலையில் பொதுக் கட்டமைப்புக் குறித்து விடுதலைப் புலிகளின் அறிவிப்பு அடுத்த வாரமளவில் வெளிவரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தாயகம் திரும்பியுள்ள நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரனோடு அவர் கருத்துப் பகிர்வில் ஈடுபட்டுள்ளார்.

இதனால் புலிகளின் உயர் பீடம் பொதுக்கட்டமைப்புக் குறித்து ஆராய்ந்து அடுத்தவாரமளவில் அறிவிப்பொன்றை வெளியிடலாம் என பரபரப்பாக எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-04)

# நடமாடும் சேவையில் விண்ணப்பித்தோருக்கான அ.அட்டைகள் கிராமசேவகர்களுக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு அவற்றை மீளப் பெற்றுக் கொடுப்பதற்காக நடாத்தப்பட்ட நடமாடும் சேவை மூலம் விண்ணப்பித்தோருக்கான அடையாள அட்டைகள் கிராமசேவையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆலோசகர் பந்துலகுலதுங்க தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் தத்தமது அடையாள அட்டைகளை கிராமசேவகர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும். அடையாள அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் பிரதேசசெயலகங்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிய முடியும்.

இதேவேளை சுனாமியினால் பாதிக்கப்பட்ட 60ஆயிரம் பேர் பு... அடையாள அட்டைகளை பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விண்ணப்பங்களில் 22 ஆயிரம் பேருக்கு புதிதாக அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்கள் தமிழ்மொழியில் இருப்பதன்காரணமாக சிங்கள மொழிக்கு மொழிமாற்றம் செய்து தேசியஅடையாள அட்டைகளை தயாரிக்க வேண்டிஏற்பட்டது. இதனால் அவ்வாறானவர்களுக்கு அடையாள அட்டைகள் கிடைக்க சிறிது காலதாமதம்ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ந-8,9)

---

# ஐ.நா....

நிலவும் அச்சுறுத்தல்களுக்கு ஐக்கியநாடுகள் சபைமுடிவெ டுக்க வேண்டிய நிலை ஒன்று இருக்க வேண்டும்.

அந்தவகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பதவிக்கு ஆசியநாட்டவர் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும் என லக்ஸ்மன் கதிர்காமர் தனது உரையில் தெரிவித்ததாக வெளிவிவகார அமைச்சுவெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனானின் பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டு முடிவடைகின்றது. இந் நிலையில் அடுத்த பொதுச் செயலாளர் ஆசிய நாட்டவரே நியமிக்கப்படவேண்டும் எனவும் கதிர்காமர் தனது உரையில் தெரிவித்துள்ளார். (ச-8)

குளிரூட்டப்பட்ட
நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
கா.நே:10.30,2.30,6.30,9.30 (பு.நே)
தாவடி மைந்தன் ஜெய் ஆகாஷ் பிரணதி மற்றும் பலர் நடித்த
குருதேவா
நடிகர் ஜெய் ஆகாஷ் நாதன்ஸ் சினிமாவிற்கு இன்று பி.ப 2மணியளவில் வருகை தரவிருக்கிறார்.
பின்னர் நிறைஞ்சனாஸ் சங்கானைக்கும் செல்வார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல்,நாசர் நடித்த
சந்திரமுகி
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே)
விசேட காட்சிகள்: 10.00, 1.00 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
புத்தாண்டு வெளியீடாக
இளைய தளபதி விஜய், வடிவேல் நடித்த
சச்சின்
கா.நேரம்: 9.30,2.30,6.30,9.30 (பு.நே)
ரிக்கெற்றுக்களை முற்பதிவு செய்யலாம்

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
கமலஹாசன், மனிஷா கொய்ராலா, நாசர் நடிப்பில்
மும்பை X பிரஸ்
பு.நே:10.30 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்யலாம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக
தாவடி மைந்தனின் மற்றுமொரு வெற்றிக்காவியம்
ஜெய் ஆகாஷ், மிஷா, ராஜ்கிரன் நடித்த
செவ்வேல்
கா.நேரம்: 11.00, 2.45, 6.30, 9.30(பு.நே)
போக்குவரத்து பேருந்து இல
782 – காரைநகர், 787 – மாதகல்
நிறைஞ்சனாஸ் சங்கானை

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.